காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை 13.10.2023 கதிர் 336

# பொருளாதாரத் தேவை குறித்து வடக்கில் எந்த ஆய்வும் இல்லை

## பிரித்தானிய அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர் தமிழ்த் தலைவர்கள்

**வடக்கின் பொருளாதாரத் தேவைகள் தொடர்பில் இதுவரையில் எந்தவிதமான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி ரெவல்யனிடம் சுட்டிக்காட்டியிருக்கின்றனர் தமிழ்க் கட்சித் தலைவர்கள்.**

**தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.வீ.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.**

**பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி ரெவல்யனுக்கும் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்றிரவு இடம்பெற்றது.**

**இச் சந்திப்பில் பிரித்தானிய அமைச்சருடன் அந்த நாட்டு இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அன்ரூ பற்றிக்கும் கலந்துகொண்டார். தமிழ்க் கட்சிகளின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறிதரன், சீ.வீ.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.**

**இச் சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்குகருத்துவெளியிடும்போதேதமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர்** ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

நேற்று நான் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை முன்னாள் விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் அழைப்பெடுத்தார். உங்கள் பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயம் என்னைச் சுட்டிக்காட்டுவது போன்று இருக்கின்றது, ஏனெனில் சட்டத்தரணியாகப் பணியாற்றி வரும் முன்னாள் விரிவுரையாளர் நான், ஆனால் அந்த வழக்கில் நான் ஆஜராகவில்லை என்றார்.

வழக்கில் சம்பந்தப்பட்டவர் பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர், அவரது தயாரும் ஒரு கல்வி சாரா ஊழியர் என்கி வகையில் இந்தப் பிரச்சினை தொடர்பில் அவர்கள் என்னுடன் வழக்குத் தொடர்பில் கலந்தாலோசித்தார்கள். வழக்கின் முதல் தவணையின்போது சட்டத்தரணி திருக்குமரனே நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார், அவர் ஒருபோதும் ☞ 2

## இஸ்ரேல் வாழ் இலங்கையர் பாதுகாப்பில் விசேட கவனம்

### ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்பு

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பிற்கும் இடையில் நிலவும் கடுமையான மோதல்களை கருத்தில் கொண்டு இஸ்ரேலில் வாழும் இலங்கையர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட அவசர தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, இஸ்ரேலில் வாழும் இலங்கை மக்களின் தேவைகள் தொடர்பில் அதிகபட்ச ☞ 2

## இலங்கையின் கடன்கள் குறித்து மொராக்கோவில் தனி மாநாடு

மொராக்கோ மராகேஷில் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டங்களுடன் 'இலங்கை: கடன் நிலைத்தன்மை மற்றும் நிர்வாக சீர்திருத்தத்திற்கான பாதைகள்' என்ற தலைப்பில் ஒரு தனிப்பட்ட அமர்வு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு 'பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்தம் தொடர்பான இலங்கை சிவில் சமூக முன்முயற்சியுடன்' தொடர்புடைய நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கையை வழிநடத்துவதில் மேற்கொள்ள வேண்டிய இரண்டு முக்கிய முன்னுரிமைகள் குறித்து இந் நிகழ்வு கவனம்செலுத்தவுள்ளது:

(1) சிவில் சமூகம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கையில் நடத்தப்பட்ட சமீபத்திய நிர்வாக மதிப்பீடுகள் மற்றும் 2) இலங்கையின் கடன் வெற்றிகரமான மற்றும் நிலையான மறுசீரமைப்பை அடைந்துகொள்வதில் ஐஆகு, அரசாங்கம் மற்றும் நாட்டின் கடன் வழங்குநர்கள் ஆகியோரின் பங்களிப்பு.

'இலங்கையின் ஊழல் எதிர்ப்பு நிலப்பரப்பில் சிவில் சமூக ஆளுகையை கண்டறியும் அறிக்கை' செப்டம்பர் நடுப்பகுதியில் வெளியிடப்பட்டது. இது இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் இலங்கைக்கான 34 நிர்வாக சீர்திருத்த பரிந்துரைகளின் விரிவான தொகுப்பை உள்ளடக்கியுள்ளது. செப்டெம்பர் மாத பிற்பகுதியில், ஆசியாவிலேயே முதன்முதலாக இலங்கை தொடர்பில் தனது ஆளுகை கண்டறியும் அறிக்கையை ஐஆகு வெளியிட்டது.

இந்தஇரண்டுநிர்வாக மதிப்பீடுகளும் ☞ 2

## இந்து சமுத்திரம் என்பது எவருக்கும் சொந்தம் இல்லாத அரசியலமைப்பு

### காலி மாநாட்டில் ஜனாதிபதி உரை

இந்து சமுத்திரம் என்பது ஆசிய- பசுபிக், இந்து - பசுபிக், மற்றும் ஒரே தடம் - ஒரே பாதை என்று எவருக்கும் சொந்தமில்லாத அரசியல் அமைப்பாகும். பல நாகரிகங்கள் இங்கிருந்தே தோற்றம் பெற்றுள்ளன. பிரித்தானிய மற்றும் மேற்கத்திய ஆதிக்கம் என்பன இந்து சமுத்திரத்திலேயே சரிவடைந்தன என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

காலி, ஜெட்வின் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற 'காலி கலந்துரையாடல் 2023' சர்வதேச மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை 'இந்து சமுத்திரத்தில் உருவாகும் புதிய ஒழுங்கு ☞ 2

## இந்து சமுத்திர எல்லை நாடுகள் முக்கிய அதிகார வழித்தடங்கள்

### இந்த நூற்றாண்டின் உருவாக்கம் என்கிறார் ராம் மகாதேவ்

இந்து சமுத்திர எல்லை நாடுகள் இந்த நூற்றாண்டின் மிக முக்கியமான அதிகார வழித்தடங்களாக உருவெடுத்துள்ளன என்பதை மறுக்க முடியாது என்று கலாநிதி ராம் மகாதேவ தெரிவித்தார்.

காலி ஜெட்வின் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற 'காலி கலந்துரையாடல் 2023' சர்வதேசமாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் ☞ 8

## ஐக்கிய அரபு இராச்சியத்துடன் கூட்டு பொருளாதாரச் சபை

### முன்மொழிந்தது இலங்கை

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக கூட்டு பொருளாதார சபையை அமைப்பதற்கு ஐக்கிய அரபு இராச்சியத்திடம் இலங்கை அரசு முன்மொழிந்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவை ஐக்கிய அரபு இராச்சியத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான அமைச்சர் அஹமட் பின் அலி சயேக் அலரி மாளிகையில் சந்தித்தபோதே பேச்சு நடத்தினார்.

இதன் போது, பிரதமரால் இந்த ☞ 8

## போர் பற்றிய அறிக்கை விரைவில் ஜனாதிபதியிடம்

### கையளிப்பு என்கிறார் சரத் வீரசேகர

இலங்கையில் எவ்வாறானதொரு போர் இடம்பெற்றது என்பதை விளக்குவதற்காக தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமை மாநாட்டிலும் இலங்கை இராணுவம் போர்க்குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்படுவதனால், அதற்குப் பதில் அளிக்கவும், யுத்தத்தின் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் ☞ 8

## முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கவில்லையாம்

### அரச ஊடகங்கள் செய்தி

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதியும், நீதிவானுமான ரி.சரவணராஜாவுக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தல்களும் இருக்கவில்லை எனவும் அவர் முன்னேற்பாடான திட்டத்திற்கமைவாகவே வெளிநாடு சென்றுள்ளதாகவும் அரச பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் டிஜிட்டல் பிரிவு அரசுக்கு வழங்கியுள்ள அறிக்கையின் அடிப்படையில் இந்தச் செய்தி வெளியிடப்படுவதாக அவை தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி ரி.சரவணராஜா ☞ 2

## ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது ரணிலுக்குக் கடின பணியே அல்ல

### நாடாளுமன்ற தேர்தலுக்கும் அதுதான் கதி என்கிறார் வீமல் வீரவன்ஸ

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை பிற்போடுவது கடினமானதல்ல என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொரளையில் உள்ள இலங்கை கம்யூனிச கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் ☞ 8

## 4.2 பில்லியன் டொலர் கடனை மறுசீரமைக்க சீனா இணக்கம்

### நிதி அமைச்சு அறிவிப்பு

4.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் மறுசீரமைப்பு தொடர்பான அடிப்படை வேலைத்திட்டத்திற்கு இலங்கையும் சீனாவின் எக்ஸிம் வங்கியும் இணக்கம் தெரிவித்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

நிதிய அமைச்சின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீண்ட கால கடன்களை மீளச் செலுத்துவதற்கான இலங்கையின் உறுதித்தன்மையை ஏற்படுத்துவதற்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் சீன ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவரல்லர். இன்று (நேற்று) இந்த வழக்கு விசாரணைக்கு வரும்போது ஆஜராகின்ற சட்டத்தரணியை வேண்டுமானால் நீங்கள் முன்னாள் விரிவுரையாளர் என்று குறிப்பிட முடியும். அப்படியானல் உங்கள் பத்தியில் அதனை திருத்தி வெளியிடுங்கள் என்றார்.

எனது பத்தியில் சட்டத்துறை முன்னாள் விரிவுரையாளர் முற்பட்டார் என்று குறிப்பிடப் பட்டிருந்தது தவறானது என்பதால் குருபரனின் கருத்துக் களை அப்படியே இங்கு தந்துள்ளேன்.

நேற்று இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் மீண்டும் அழைக்கப்பட்டபோது அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. குற்றஞ்சாட்டிய பெண் சந்தேகநபரை அடையாளம் காட்டினார். அதை அடுத்து அவரை ஒக்டோபர் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டுள்ளதை அடுத்து அவர் மீதான குற்றச்சாட்டுப் பத்திரம் விரைவில் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

......................

சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் கொடுக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் விலை 7 ரூபாய் குறைத்து விற்பனை செய்யப்படுகின்றது. அதற்கான அறிவிப்பு அந்தந்த




எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சினோபெக் விற்பனை நிலையங்கள் நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டபோது பெற்றோல் விலையை 3 ரூபாய் குறைத்த விற்பனை செய்வதாக அறிவித்தது அந்த நிறுவனம். இப்போது சத்தம் சந்தடியின்றி 7 ரூபாய் விலைக் குறைப்பைச் செய்துள்ளது.

இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோலிற்கு 365 ரூபா நிர்ணயம் செய்துள்ள நிலையில் சீனாவின் சினோபெக் எரிபொருள் விற்பனை நிலையத்தில் 358 ரூபாவென விளம்பரம் காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றது. அதேபோன்று டீசல் விலையையும் 3 ரூபாயால் குறைத்துள்ளது.

யாழ். குடாநாட்டில் திருநெல்வேலி, தாவடி, சுன்னாகம் போன்ற இடங்களில உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் இயக்கச்சி விற்பனை நிலையத்திலும குறித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அது தொடர்பான அறிவிப்பும் அந்தந்த விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஐஒசி நிறுவனம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பல தடவைகள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலையைவிட அதிகரித்த விலையில் எரிபொருளை விற்பனை செய்திருக்கிறது. ஆனால், சீனாவோ விலையைக் குறைத்து சந்தையைப் பிடிக்க கடும் முயற்சி செய்கிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொருளாதாரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீ. வீ. விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் என்ன என்பது தொடர்பில் எங்களிடத்தே கேட்டிருந்தபோது அனைத்துப் பிரச்சனைகள் தொடர்பிலும் நாங்கள் எடுத்துக் கூறினோம். ஆனாலும் எங்களுடைய பலவிதமான பிரச்சனைகளைப் பற்றியும் அவர்களுக்கு தெரிந்தேயிருந்தது.

அதேநேரத்தில் இரண்டு இனங்களையும் சேர்த்து வைப்பதற்கான வழிமுறைகள் இருக்கிறதா என்பதைப் பற்றி ஆராயந்தார்கள்.

இதைப்பற்றி பல விடயங்களை பேசியதுடன் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் கேட்டிருந்தனர்.

இதுவரை காலமும் வடக்கு மாகாணத்திலே பொருளாதாரரீதியாக எங்களுடைய தேவை என்ன என்பது சம்பந்தமாக போதுமான ஆய்வு செய்து அறிக்கை பெறப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினோம்.

இது சம்பந்தமாக கடந்த 2003 இலே அவர்கள் ஒன்று தொடங்கினார்கள். அதன் பின்பு என்னுடைய காலத்திலே நான் கேட்டு தொடங்கினார்கள். ஆனால் அதை அவர்கள் முடிக்கவில்லை.

ஆகவே எங்களுடைய வடகிழக்கு மாகாணத்தில் மக்களிக்கு இருக்கும் தேவைகள் என்ன? அதாவது போரின் பின்னர் எங்களுக்குஏற்பட்ட பாதிப்புக்கள், தேவைகள் என்ன என்பது சம்பந்தமாக போதுமான அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

மேலும் எங்களது அரசியல் ரீதியான பிரச்சனைகள தொடர்பில் கேட்ட போது, நாங்கள் எல்லோருமே அதனை எடுத்துக் கூறியிருந்தோம்.

குறிப்பாக ஆட்சியாளர்களுடைய முகம் தற்போது சற்று வித்தியாசமாக மாறியிருப்பதையும் சுட்டிக்காட்டினோம்.

ஆனாலும் வருங்காலத்தில் இவை மாற்றமடையக் கூடும் என்ற ஒரு கருத்தை எங்களிடத்தே அவர்கள் முன்வைத்தார்கள்.

ஆகவே அதிலிருந்து அவர்களும் தங்களால் இயலுமானவரையில் தமிழ்மக்களுடைய பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் மற்றும் அரசு எவ்வாறு தன்னுடைய நிலைப்பாட்டை மாற்ற முடியும் என்பது சம்பந்தமாக அவர்களுடைய பேச்சிலிருந்து எங்களால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்றார்.

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி இந்தியா செல்வதற்காகவே வெளிநாட்டுக்கான விடுமுறையொன்றைகோரியுள்ளார். அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நீதிபதியின் முன்னேற்பாடான திட்டத்திற்கு இணங்க கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி அவர் வெளிநாட்டிற்கு சென்றுள்ளார். திட்டமிட்ட இந்த செயல் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி இதற்கு முன்னர் எந்த சந்தர்ப்பத்திலும் பொலிஸார், நீதிச்சேவைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவில்லை. 23 ஆம் திகதி இராஜினாமா கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கி , 24 ஆம் திகதி அவர் வெளிநாடு சென்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் மனைவி, முல்லைத்தீவு மேலதிக நீதவான், முல்லைத்தீவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்டோரின் வாய்மூல வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வாக்குமூலங்களை வழங்கிய அனைவரும், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவிக்கவில்லை என்றே தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி கடந்த செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி துபாய்க்கு சென்றார். அதற்காக அவர் எயார் அரேபியா விமான சேவைக்கான விமான டிக்கெட்டை குருநாகலிலுள்ள முகவர் ஒருவர் ஊடாக கொள்வனவு செய்துள்ளார். அமெரிக்காவின் தொலைபேசி இலக்கமொன்றின் மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த அமெரிக்க தொலைபேசி இலக்கம் செயற்படாவிட்டால், மீண்டும் அழைப்பதற்காக கென்யாவின் தொலைபேசி இலக்கமொன்று டிக்கட் விற்பனை முகவரால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. விமான டிக்கெட்டுக்கான கட்டணம் கல்முனை பிரதேசத்தில் செலுத்தப்பட்டுள்ளது என்றுள்ளது.

## 4.2 பில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எக்ஸிம் வங்கியின் கடன் மறுசீரமைப்பு உடன்பாடு உதவியாக இருக்கவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு இணங்க பொதுக்கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான சீன எக்ஸிம் வங்கியின் பங்களிப்பு மற்றும் தொடர்ச்சியான ஆதரவிற்கு இலங்கை அரசாங்கம் நன்றிகளை தெரிவிக்கின்றது.

கடன் பெறுநர்கள், வணிகக் கடன் வழங்குநர் குழுவுடன் சீன எக்ஸிம் வங்கி தொடர்ந்தும் உறவைப் பேணவுள்ளது.

இலங்கைக்கும் சீன எக்ஸிம் வங்கிக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டியுள்ளது.

அந்த ஒப்புதலின் பின்னர், இரண்டாவது தவணைக் கொடுப்பனவான 334 மில்லியன் அமெரிக்க டொலர்பன் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவுள்ளது. இலங்கையும் எக்ஸிம் வங்கியும் அடுத்த சில வாரங்களுக்கு இதற்காக தீவிரமாக செயற்படவுள்ளன என்றுள்ளது.

இதேவேளை, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, எங்கள் நாட்டின் கடன் நிலைமையைத் தீர்ப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ள சீனா எக்சிம் வங்கிக்கு நன்றி கூறுகிறோம். இந்த உடன்படிக்கையானது இலங்கை பொருளாதார மீட்சியை எட்டும் முயற்சிகளில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது. அடுத்த சில வாரங்களில், இலங்கை அதிகாரிகளும் சீனா எக்ஸிம் வங்கியும் கடன் மறுசீரமைப்பை தீவிரமாக செயல்படுத்த உள்ளனர் என்றார்.

## இஸ்ரேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையீட்டை வழங்குவதற்காக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் இலங்கை அரசின் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளன.

இஸ்ரேலில் பணிபுரியும் அல்லது வேறு காரணங்களுக்காக தங்கியிருக்கும் இலங்கையர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பின் அல்லது அது தொடர்பான வேறு ஏதேனும் சிரமங்கள் இருப்பின், இலங்கை அதிகாரிகளுக்கு நேரடியாகத் அறிவிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, தொலைபேசி எண் (1094) 117966396, வாட்ஸ்அப் எண் (1094) 767463391 அல்லது ழிளஉ_நபெயளூபஅயடை.உழஅ என்ற மின்னஞ்சல் மூலம் தேவையான தகவல்களை அறிய முடியும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட குடிவரவு குடியகல்வு நடைமுறைகள் மற்றும் வேறு எந்த முறையின் கீழும் இஸ்ரேலில் தங்கியுள்ள எந்தவொரு இலங்கையருக்கும் இந்த சேவையைப் பெற முடியும் என அரசாங்கம் வலியுறுத்துகிறது.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் ஆட்சி, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான வலுவான அடித்தளத்தை அமைக்கும் திறனைக் கொண்டுள்ளன. கடன் நிர்வாகத்தில் முன்னேற்றங்கள் எவ்வாறு நாடுகளுக்கு தொடர்ச்சியாக வரும் கடன் பிரச்சனைகளைத் தவிர்க்க உதவும் என்பதை இந்த நிகழ்வில் கலந்துரையாடப்படும்.

இலங்கையின் வெளிநாட்டு கடன்களை கணிசமாக குறைப்பதனூடாக எவ்வாறு இறுதியில் ஒட்டுமொத்த கடன் சுமையை குறைப்பது என்பது மற்றும், நாட்டின் கடுமையான கடன் நிலைப்புத்தன்மை இலக்குகளை அடைய அது எவ்வாறு உதவும் என்பது பற்றியும் இந்நிகழ்வில் கலந்துரையாடப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர், வெரிட்டே ரிசர்ச்சின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி நிஷான் டி மெல், ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனத்தின் இலங்கையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நதீஷானி பெரேரா மற்றும் குளோபல் ஸொவரின் அட்வைசரி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி ஆய்வாளர் தியோ மாரெட் ஆகியோர் உரையாற்றி கேள்விகளுக்குப் பதிலளிக்கவுள்ளனர். தொம்சன் ரொய்ட்டர்ஸ்எமர்ஜிங்மார்க்கெட்ஸின் நிருபரான ஜோர்ஜெலினா டோ ரொசாரியோவால் இந்த அமர்வு வழிநடத்தப்படும்.

இத்தனிப்பட்ட நிகழ் விற்கு பிரத்தியேகமாக அழைக் கப்பட்டவர்களில் சர்வதேச நாணய நிதியத்தின் உயர் சபையின் பல நிர்வாக பணிப்பாளர்கள், பலதரப்பு நிறுவனங்களின் பிராந்திய தலைவர்கள், பல முக்கிய பங்குதாரர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் மற்றும் மராகேஷில் நடைபெறும் சர்வதேச நாணய நிதியத்தின் இன் வருடாந்த கூட்டத்திற்கான இலங்கை பிரதிநிதிகள் குழுவின் உயர்மட்ட உறுப்பினர்களும் கலந்துகொள்ள உள்ளனர்.

# சஜித்தும் அனுரவும் இஸ்ரேலை முன்மாதிரியாக கொள்ளவேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

இஸ்ரேலை முன்மாதிரியாக்கொண்டு சஜித் பிரேமதாசவும் அநுரகுமார திஸாநாயக்கவும் நாட்டை மீட்கும் செயற்பாட்டில் இணைந்துகொள்ளுமாறு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

இஸ்ரேலில் இடம்பெற்று வரும் யுத்தத்தின் மூலம் எங்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த முன்மாதிரியான விடயங்கள் இருக்கின்றன. அதுதான் இஸ்ரேல் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் தேசிய இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொண்டு நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினையில் ஒன்றாக இணைந்து செயற்பட அவர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அரசியல் பேதங்களை பின் தள்ளிவிட்டு ஒன்றாக இணைந்து செயற்பட இஸ்ரேல் தற்போது எடுத்துள்ள தீர்மானம் இலங்கைக்கு சிறந்த முன்மாதிரியை வழங்குகிறது. இலங்கை பொருளாதார ரீதியில் யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் இலங்கையிலும் எதிர்க்கட்சிக்கும் வேறு அரசியல் கட்சிகளுக்கும் தற்போது இருக்கும் பொறுப்பு இதுவாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று வெளிநாடுகளில் இருக்கும் இஸ்ரேல் இளைஞர் யுவதிகள் தங்களின் நாட்டுக்கு வந்து, தற்போது நாட்டுக்காக செயற்பட தயாராகி வருகின்றனர்.

தங்கள் நாடு நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் நேரத்தில் இளைஞர் யுவதிகள் தங்களின் கடமையை செய்வதற்கு முன்னுக்கு வருகிறார்கள். இதுவும் எமது நாட்டு இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த முன்மாதிரியாகும். அதனால் இஸ்ரேலை முன்மாதிரியாக்கொண்டு நாட்டை கட்டியெழுப்பும் பயணத்துக்கு இணைந்துகொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவரிடமும் அநுரகுமார திஸாநாயக்கவிடமும் இளைஞர் யுவதிகளிடமும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## இந்து சமுத்திரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறை' என்ற தொனிப்பொருளின் கீழ் 11 சர்வதேச அமைப்புகள் மற்றும் 44 நாடுகளின் சமுத்திரவியல் பிரதிநிதிகள் மற்றும் கடற்படை பிரதானிகளின் பங்கேற்புடன் இன்றும் (நேற்று) நாளையும் (இன்று) இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத போர் நிறைவடைந்ததன் பின்னர் அதன் அனுபவங்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்வதற்காக, 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காலி கலந்துரையாடல் சமுத்திரவியல் மாநாடு இம்முறை 11 ஆவது தடவையாக இடம்பெறுகின்றது.

மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

இந்த காலி கலந்துரையாடலில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய துறைகள் தொடர்பில் பங்குபற்றியுள்ள உங்கள் அனைவரினதும் கருத்துக்களை தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

இந்திய சமுத்திர மாநாட்டின் முன்னோடியான கலாநிதி ராம் மஹாதேவும் இங்கு இருக்கிறார். அதனால் போட்டித்தன்மையின் ஒரு பகுதியாக அல்லாது, ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்தியாவின் பின்புலத்துடன் கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தற்போது நாம் இந்து சமுத்திரத்தில் வளர்ந்துவரும் புதிய ஒழுங்குமுறை தொடர்பில் கலந்துரையாடுகிறோம். குறிப்பாக கலாநிதி மஹாதேவ் அவர்களின் உரையின் பின்னர் இந்திய சமுத்திரம் என்பது யாது? ஆசிய-பசுபிக், இந்து - பசுபிக் மற்றும் ஒரே தடம் - ஒரே பாதையுடன் உள்ள தொடர்பு குறித்து கேள்விகளை கேட்க நினைத்தேன்.

ஆசியா - பசுபிக் என்பது ஒருவகைசித்தரிப்பாகும். இரண்டாம் உலகப் போரின் பின்னர் பசுபிக் வலயத்திற்குள் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் கேந்திர நிலையம் மற்றும் கலந்துரையாடல் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் சீனா உட்பட ஏனைய நாடுகள் ஒன்றிணைந்து ஆசிய - பசுபிக் பொருளாதாரத்தை கட்டமைத்தலே இதன் ஆரம்பமாகும். அது பொருளாதார எழுச்சி என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரே தடம் - ஒரே பாதை என்றால் என்ன? அதனை பாதுகாப்பு எழுச்சியென சிலர் கூறினாலும், ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவிற்கு இடையில் காணப்படும் வரலாற்று வர்த்தக தொடர்பின் ஊடாக எழுச்சிபெறும் சீனாவை மையப்படுத்திய வர்த்தக வேலைத்திட்டம் என்பதே எமது நிலைப்பாடாகும். அதேபோல் இந்து, பசுபிக் என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட பாதுகாப்பு எழுச்சியாகும்.

இருப்பினும் இந்து சமுத்திரம் என்பது ஓர் எழுச்சி அல்ல. அது நாகரிகமாகும். எழுச்சிகள் ஏற்படலாம், மறைந்தும் போகலாம். ஒரு காலத்தில் சோவியத் ஒன்றியம் இருந்ததை போல ஐரோப்பாவின் எழுச்சிக்கான மேற்கத்திய குழுக்களும் இருந்தன. தற்போது அவை அனைத்தும் மாயமாகிவிட்டன. தற்போது ஐரோப்பிய ஒன்றியம் இருந்தாலும் உக்ரைனில் போர் நடக்கிறது. இவ்வாறான எழுச்சிகள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மறைந்து போகும். அந்த எழுச்சிகள் பாதுகாப்பு மற்றும் பொருளாதார அறிவியலின் மீது தங்கியுள்ளது.

ஆனால் இந்து சமுத்திரம் ஒரு நாகரிகமாகும். உலக நாகரிகம் இங்கிருந்தே தோற்றம் பெற்றது. மொகான்தாஸ்கே முதல் பாராவோவினர் வரையிலான அனைத்தும் எமதுவசமாகவிருக்கும் நாகரிகத்தின் ஒரு பகுதியாகும். இந்த நாகரிகம் தான் உலகின்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

# இலங்கையின் கல்வி முறைமைகள் சர்வதேச மட்டத்திற்கு செல்லுமாம்!

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உறுதி



'எதிர்காலத்தில் இலங்கையின் கல்வி முறைமைகள் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்' என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் கல்வி முறைமைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இலங்கையின் முன்பள்ளிக் கல்வி, பாடசாலைக் கல்வி, தொழிற் பயிற்சிக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகிய நான்கு துறைகளும் ஏனைய முன்னேறிய கல்வி முறைகளுக்கு அமைவாக பாட நெறிகள் மற்றும் வளங்களுக்கு இணையாக அபிவிருத்தி செய்யப்படும்.

இதனடிப்படையில் குறித்த நான்கு கல்வித் துறைகளும் சர்வதேச மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும். எதிர்காலத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஆசிரியர் கல்விக்காக அர்ப்பணிக்கப்பட்ட கல்விப் பல்கலைக்கழகம் ஒன்று ஸ்தாபிக்கப்படும். இதன்மூலம் யாழ். குடாநாட்டின் கேந்திர நிலையமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமையும்.

வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர் பயிலுநர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும். இதன்மூலம், 2027 ஆம் ஆண்டுக்குள் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரி ஆசிரியர்களாகப் பயிற்சியுடன் பாடசாலை வகுப்பறைகளுக்கு அனுப்புவதே எமது எதிர்பார்ப்பு.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் இருந்து முறையான தொழில் சார் பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரந்த வாய்ப்புகள் உருவாக்கப்படும்' இவ்வாறு சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். (05)

# தரம் குறைந்த மருந்து பொருள்கள் கொள்வனவு

## சஜித் பிரேமதாஸ பாரிய குற்றச்சாட்டு



தரம் குறைந்த மருந்துப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படுவது தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாரிய குற்றச்சாட்டு ஒன்றினை முன்வைத்துள்ளார்.

மருந்துப் பொருள்கள் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

'இத்தருணத்தில் தற்போதைய அரசாங்கமும், சுகாதார அமைச்சரும், சுகாதார அமைச்சும் நாட்டுக்கு தரமற்ற மருந்துகளைக் கடத்துவதில் முதல் புள்ளியாக மாறியுள்ளனர். போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இம்யூனோகுளோபுலின் என்ற அத்தியாவசிய மருந்து வழக்கமான கொள்முதல் முறைகளைப் பின்பற்றாமல் பதிவுமுறை இல்லாது கொண்டு வரப்பட்டுள்ளது.

நாட்டு மக்களை மரணப் படுக்கைக்கு இட்டுச் செல்லும் தரக் குறைவான மருந்துகளை வழங்குவதற்கு தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமும், சுகாதார அமைச்சரும், சுகாதார அமைச்சும் பொறுப்புக் கூற வேண்டும்.

கொள்முதல் மற்றும் பதிவுமுறையற்ற, தரம் குறைந்த ஐ.ஏ.வி.ஐ.என்ற மருந்துப்பொருள்கள் சட்டவிரோதமாக இந்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டு, இந்நாட்டில் பல நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது நேரடியாக நரம்புக்குள் செலுத்தப்படும் ஒரு மருந்து மற்றும் பிரதானமாக நரம்பியல் வலிக்கு பயன்படுத்தப்படுவதோடு, மேலதிகமாக இம்மருந்து மூட்டுகள் மற்றும் இதய நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தொடர்புடைய வைத்திய நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இந்தத் தரக் குறைவான மருந்து கொடுக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நாட்டின் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் தலைமையிலான அரசாங்கத்தின் பதில் என்னவாக இருக்கிறது. அரசாங்கம் நட்புவட்டார முதலாளித்துவத்தை முதன்மைப்படுத்தி, அரசியல் சூதாட்டங்களை நடத்தி, தேர்தலை நிறுத்தும் அரசியல் மோசடிகளில் ஈடுபட்டு, நாட்டு மக்களை மரணப் படுக்கைக்கு கொண்டுசெல்கின்றமுது.

இந்த மோசடிக்கு ஜனாதிபதியே பொறுப்புக் கூற வேண்டும். ஊழல் மிக்க சுகாதார அமைச்சரை இப்போதே ஜனாதிபதியால் நீக்க முடியும். ஜனாதிபதி அதை செய்யமாட்டார். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதியை நிலை நாட்டப்படும்' என கூறியுள்ளார். (05)

# யாழில் இளைஞனை தாக்கி கொள்ளை மூன்று பெண்கள் உள்ளிட்ட 6 பேர் கைது



இளைஞனைத் தாக்கி பணம், உள்ளிட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி குறித்த சந்தேகநபர்கள் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு இளைஞன் ஒருவரை மறவன்புலவு பகுதிக்கு வரவழைத்துள்ளனர். அங்கு இளைஞனைத் தாக்கி அவரிடமிருந்த நாலரைப் பவுண் தங்கநகைகள், இரண்டுகையடக்க தொலைபேசிகள், கைக்கடிகாரம் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். அதன்பெறுமதி 10 லட்சத்து 25 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், சிலாபத்தைச் சேர்ந்த 3 பெண்களும், கனகராயன்குளத்தை சேர்ந்த இரு ஆண்களுமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப் பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நகைகளை கொள்வனவு செய்த வவுனியாவைச் சேர்ந்த கடை உரிமையாளர் அவற்றை உருக்கி தங்க தட்டுகளாக மாற்றிய நிலையில் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் ஆறு சந்தேகநபர்களையும், சாவகச்சேரி நீதிமன்றில், செவ்வாய்க்கிழமை முற்படுத்திய போது அவர்களை 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)



# இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் வேலை வாய்ப்பு!

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

விசேட திறன்களைக் கொண்ட இலங்கை இளைஞர்களுக்கு எஸ்.எஸ்.டபிள்யு. பிரிவின் கீழ் ஜப்பானில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கு புதிய ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அதன் நிறுவனமும் ஐ.எம். ஜப்பானும் கையெழுத்திட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

செவிலியர் சேவைகள், உணவு பதப்படுத்துதல் மற்றும் விவசாயத் துறைகள் தொடர்பாக, இதன் கீழ், இந்த நாட்டின் இளைஞர்கள் 5 வருட சேவைக் காலத்துக்கு வேலை வாய்ப்புகளைப் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய மொழிப் புலமைப் பரீட்சை மற்றும் விசேட திறன் தொடர்பான பரீட்சையின் 4 ஆம் நிலை சித்தியடைந்த இளைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (05)

# இலங்கைக்குப் பெருமை சேர்த்த வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு!

சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கைக்கு தங்கம், வெள்ளி உள்ளிட்ட பதக்கங்களை பெற்றுக் கொடுத்த வீரர்கள் நாடு திரும்பிய நிலையில், அவர்களுக்கு விமானநிலையத்தில் பெரும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் இரண்டு வெங்கலப்பதக்கங்களை பெற்றுக் கொடுத்த வீரர்கள், சீனாவிலிருந்து நாடு திரும்பினர்.

இதன்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் இவர்களுக்கு பெரும்வரவேற்பு அளிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு பதக்கத்தைக்கூட வெல்ல முடியாமல்போன இலங்கைக்கு, இம்முறை 5 பதக்கங்கள் கிடைத்திருந்தன.

விசேடமாக 21 வருடங்களுக்குப் பின்னரே இலங்கைக்கு இம்முறை, தருஷி கருணாரத்னவால் தங்கப்பதக்கம் கிடைத்தது.

45 நாடுகள் பங்கேற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் இலங்கை 26 ஆவது இடத்தில் பதக்கப்பட்டியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக அலி சாஹிர் மௌலானா!



கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக அலி சாஹிர் மௌலானா புதன்கிழமை தெரிவு செய்யப்பட்டார்.

இந்தத் தீர்ப்பு அரசியல் கட்சிகளுக்கு ஒரு முக்கியமான முன்னுதாரணமாக அமைவதாக அலி சாஹிர் மௌலானா ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள தனது தொகுதி மக்களுக்கும், இலங்கைக்கும் உண்மையாக பணியாற்றவுள்ளதாக அலி சாஹிர் மௌலானா குறிப்பிட்டுள்ளார். (05)

# வனிந்து ஹசரங்கவிற்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைவு!





இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறைவீரரான வனிந்து ஹசரங்கவிற்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வனிந்து ஹசரங்க தனது உடலில் ஏற்பட்ட உபாதை காரணமாக அண்மையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில்,' தனக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை வெற்றியடைந்துள்ளதாகவும், நாட்டுக்காக உத்வேகத்துடன் களமிறங்குவேன் என நம்புவதாகவும்' வனிந்து ஹசரங்க தனது முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இச்செய்தியானது அவரது ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏன் இந்த மாற்றம்?

ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவர் பதவியைப் பிடித்ததில் இருந்து அவரிடம் ஏற்பட்டிருக்கக்கூடிய கொள்கை மாற்றங்கள் அசாத்தியமானவை.

2015ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காக மைத்திரிபால சிறிசேனவுடன் சேர்ந்துகொண்டு அரசுத் தலைவர் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் எதிர்கொண்டபோது சீனாவை கிட்டத்தட்ட எதிரியாகச் சித்தரித்தார். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்படும் என்று அறிவித்தார்.

ஆட்சிக்கு வந்ததும் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்தினார் என்பதும் தெரிந்ததே. பின்னர் அந்தத் திட்டம் தொடர அனுமதிக்கப்பட்டது. இடையில் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதற்கான தண்டம் கட்டியதும் அறிந்ததே. அதுபோன்றே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் பின்னர் சீனாவிற்கே நீண்ட காலக் குத்தகைக்கு விட்டார் ரணில்.

ரணில் விக்கிரமசிங்க மேற்குல அரசியல் சார்ந்தவர் என்றே கருதப்படுபவர். அந்தக் கருத்தின் அடிப்படையிலேயே அவரது தற்போதைய ஆட்சியை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் பலவும் அணுகுகின்றன. ராஜபக்ஷக்களை விடவும் ரணில் தமக்குச் சார்பானவர்கள் என்று அவை கருதுவதன் அடிப்படையிலேயே எந்த மக்கள் அங்கீகாரமும் இன்றி, மக்களின் உரிமைகளை மீறி தேர்தலை நிறுத்தி அவர் செய்யும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டும் காணாமல் இருந்து வருகின்றன.

இருப்பினும் அண்மைய நாட்களாக ரணில் சீன ஆதரவுக் கருத்துக்களை அதிகளவில் தெரிவித்து வருகின்றார். நேற்று காலியில் நடந்த இந்து சமுத்திர பாதுகாப்புத் தொடர்பான 'காலி கலந்துரையாடல் 2023' சர்வதேச மாநாட்டிலும் அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். சீனாவின் ஒரே தடம் – ஒரே பாதை திட்டத்தை ஒரு வர்த்தக எழுச்சி என்றே இலங்கை கருதுகின்றது என்று குறிப்பிட்டார். இது மேற்குலகின் சீனா குறித்த சித்தாந்தங்களுக்கு முற்றிலும் மாறானது.

"ஒரே தடம் ஒரே பாதை என்றால் என்ன? அதனை பாதுகாப்பு எழுச்சியென சிலர் கூறினாலும், ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவிற்கு இடையில் காணப்படும் வரலாற்று வர்த்தக தொடர்பின் ஊடாக எழுச்சிபெறும் சீனாவை மையப்படுத்திய வர்த்தக வேலைத்திட்டம் என்பதே எமது நிலைப்பாடாகும். அதேபோல் இந்து, பசுபிக் என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட பாதுகாப்பு எழுச்சியாகும்" என்றார் அவர்.

பட்டுப் பாதைத் திட்டம், ஒரே தடம் – ஒரே பாதை திட்டம் ஆகியவற்றின் ஊடாக சீனா இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்குள் தனது கால்களை அகல விரித்தபோது அது சீனாவின் இராணவ நலன்களுக்கான நகர்வு என்றே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கருதுகின்றன. அதனாலேயே சீனாவிற்கு எதிரான மூலோபாயமாக அவை இந்தோ பசுபி கொள்கையை முன்வைக்கத் தொடங்கின. அதுவும் தவிர அமெரிக்கா சீனா ஜப்பான் இந்தியா ஆகியன இணைந்து குவாட் என்ற கூட்டணியையும் உருவாக்கியுள்ளன.


அப்படியிருந்தும், அவற்றுக்கு மாறாக சீனாவின் திட்டம் இராணுவ நலன்களுக்கானது அல்ல அது வர்த்தக நடவடிக்கைகளுக்கானது, ஆசியாவின் பொருளாதார முன்னேற்றத்துக்கானது என்று ரணில் உறுதியாக வாதாடுகின்றார். அதுவும் கொஞ்ச நாட்களாக, அவரது இந்த சீனச் சார்பு நிலைப்பாட்டை அவர் ஆணித்தரமாக வெளிப்படுத்தி வருகின்றார்.

இது, சீனாவிடமிருந்து கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு ஆதரவு தேவை என்பதை எதிர்பார்த்து அவர் முன்வைக்கும் கருத்துக்களாக மட்டும் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று உறுதியாக நம்பலாம். கடந்த பொதுத் தேர்தலில் அரசியல் களத்திலிருந்தே அகற்றப்பட்ட அவரும் அவரது கட்சியும் மீள் எழுச்சிபெற முடியாதிருக்கும் நிலையில், அடுத்தடுத்த தேர்தல்களில் மக்கள் ஆதரவைப் பெறவேண்டும் என்றால் ராஜபக்ஷக்களின் கொள்கைகளையே தனது கொள்கைகளாகவும் கொண்டிருக்கிறார் என்று சிங்கள பௌத்த மக்களை நம்ப வைப்பதற்கான அவரது முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

அண்மையில் அவரது கருத்துக்களை முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக் ஷ ஆகியோர் வரவேற்றுச் சிலாகித்திருந்தார்கள். சர்வதேச விசாரணை இல்லை, சீன ஆதரவு, இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை என்பனவெல்லாம் சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் கவர்ந்திழுக்கும் அவரது திட்டங்களின் படிநிலைகளாகவே தோன்றுகின்றன.

# வயோதிப வாலிபர் சங்கம்

**என் சத்திய மூர்த்தி**



பதிமூன்றாவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்தித் தர இந்தியாவிற்கு தார்மீக கடமை உள்ளது என்றும், அது குறித்த கோரிக்கையை முன்வைக்க தமிழ் அரசியல் தலைவர் கள் பிரதமர் நரேந்திர மோடியை டெல்லி சென்று சந்திக்க முடிவு செய்திருக்கிறார்கள் என்றும் இது விடயத்தில் மோடிக்கு கூட்டுக் கடிதத்தை தற்போது எழுதுவதா, அல்லது பின்னர் எழுதுவ தாக என்பதை இன்று, வெள்ளிகிழமை கூடி முடிவு செய்ய இருக்கிறார்கள் என்றும் முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி வி விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பின்படி, தமிழ் அரசு உள்ளிட்ட தமிழ் தேசியம் பேசும் அரசு சார தமிழ்க் கட்சிகளில் பெரும்பான்மையானவை, இது குறித்த பேச்சுக்களில் கலந்துகொண்டுள்ளன. அவை அனைதுமே அடுத்த டுத்த கூட்டங்களிலும் பங்கெடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



ஆனால், இந்த பேச்சுக்களில், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பங்குபெற்றதாகச் செய்திகள் கூற வில்லை. அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா என்பதும் தெரியவில்லை. அண்மைக் காலத்தில், நீதிபதி சரவணராஜா விவகாரத்தில் மனிதச் சங்கிலி போராட்டத்திற்கு கூட்டு அழைப்பு விட்டதில் மட்டுமே அவரது ஒற்றுமையான பங்களிப்பு இருந்தது எனலாம்.



**கசந்த தேனிலவு**

இப்போது, தமிழ் அரசியல் தலைமைகளின் முன்னால் இருக்கும் கேள்விகள் இதுதான். இந்தியா மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கேவிற்கு அழுத்தம் தருவதா, அல்லது, அடுத்த வருடம் நடைபெற இருப்பதாக உள்ள ஜனாதிபதி தேர்தல் மூலம் செய்தி விடுப்பதா, என்பதுதான்.

அதற்கு முன்னரே உள்ள கேள்வி இது தான். தமிழ் தலைமைகள் இப்போதாவது ஒன்றாக நிற்குமா, அல்லது, ரணில் தனி மனிதர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவதை முன்னிறுத்தி, தமிழ் அரசியலை பிளவுபடுத்த முன்னிற்குமா, என்பது தான்.

முந்தைய ராஜபக் ஆட்சிக் காலத்திலா வது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வலுவான அணியை முன்னிறுத்தியே, அரசு இன அரசியல் செய்தது. தற்போது ஜனாதிபதியாக, முன்னர் 2015 முதல் -19 வரையான காலகட்டத்தில் பிரதமராக இருந்த ரணில், சுமந்திரனை முன்னிறுத்தியே தனது தமிழர் அரசியலை முன்னெடுத்தார்.

அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, 'பெருந்தலைவர்' சம்மந்தனின் பிரதிநிதியாக சுமந்திரனே, அயல்நாட்டு தூதுவர்களையும் அரசின் பிற தலைவர்களையும் கண்டு கலந்தாடி வந்தார். இரண்டு, பிற தமிழ் முன்னணி தலைவர்களை வைத்து நோக்கும் போது, சுமந்திரனே மிக குறைந்த அரசியல் அனுவம் உள்ளவர்.

அவ்வாறு, சுமந்திரனை மட்டுமே முன்னிறுத்தி ரணில் அரசியல் செய்ததின் மூலம், கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் மற்றும் அவர் சார்ந்த தமிழ் அரசு தலைமைக்குள்ளேயே புகைச்சல் தோன்றியது. அதுதானே ரணிலுக்கு வேண்டியது. இப்போது, சுமந்திரனைக் கைவிட்டு, இப்போது வாய் திறக்கும் விக்கினேஸ்வரனை முன்னிறுத்தி, அவருடன் தனியாக பேச்சு நடத்தத் தொடங்கியுள்ளார் ரணில். ஆனால், அந்தத் தேனிலவு இரண்டொரு மாதங்களிலேயே கசந்து விட்டது. இப்போது, தான் ஏமாற்றப்பட்டோம் என்று புரிந்து கொண்ட பின்னர், விக்கினேஸ்வரன் வாய் திறக்கிறார். அதாவது, புலிக்குப் பயந்தவன் எல்லாம் என் மீது படுத்துக்கொள்ளுங்கள் என்றவிதமாக. (புலிகள் என்றால் தமிழர் தரப்பில் அர்த்தம் வேறு. எனவே, சிங்களசிங்கத்திற்கு பயந்தவர்கள் எல்லாம்.... என்று வேண்டுமானால், பழமொழியை புது மொழியாக்கி கொள்ளலாம்.)

**2019 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற கோட்டபாய ராஜபக்ச, தமி ழர்கள் வாக்குகள் இல்லாமலே வெற்றிபெற்றார். ஏன், தமிழர் பகுதிகளில் பரப்புரை செய் வதையே அவர் தவிர்த்தார். ஆனால், அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் நிலைமை வேறாக இருக்கும். அப்போது, ரணிலை ஆதரிப்பதாக இருந்தால், முன்பு சம்மந்தன் செய்த அதே தவறை இவர்களும் செய்துவிடக்கூடாது. இனப்பிரச்சினை வேறு, தேர்தல் அரசியல் வேறு என்று அவர் விட்ட பிழைதான் இன்றைய நிலைமைக்குக் காரணம்.**

**பிரித்தாளும் அரசியல்**

அடுத்தவர்களைப் பிரித்தாளும் அரசியல் செய்வதில் ரணில் பழம் தின்று கொட்டை போட்டவர். ஆனானபட்ட விடுதலை புலிகள் அமைப்பையே சொல்லி வைத்து அடித்தவர். போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில், கருணா தலைமையிலான விடுதலை புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண பிரிவை பிரித்தெடுத்தவர்.

முன்னரும் கிழக்கு மாகாண தமிழர் தலைமைகளுக்கு தங்களை வடக்கின் யாழ்பாணத் தமிழ்த் தலைவர்கள் மனிதர்களாகவே மதிக்கவில்லை என்ற ஆதங்கம் இருந்தது. வடக்கில், யாழ்ப்பாணத் தமிழர்களிடையே இருந்து சாதி பாகுபாடு களை இல்லாததாக்கிய பெருமை விடுதலை புலிகள் அமைப்பிற்கு இருந்தது. ஆனாலும், வடக்கு-கிழக்கு என்று வரும்போது, உயர்ந்தவன்- தாழ்ந்தவன் என்ற பாகுபாடு மாறவில்லை. அதன் காரணமாகவே, கிழக்கு போராளிகளை அரச இராணுவத்தினருக்கு தீவனமாக அனுப்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டு, விடுதலை புலிகள் அமைப்பு தலைமை மீது வைக்கப்பட்டது. அந்த குற்றச்சாட்டில் உண்மை இருந்ததாலேயே, அந்தப் போராளிகள் கருணாவின் பின் அணி திரண்டனர்.

இந்தப் பாகுபாட்டை, தமிழ் அரசியல் தலைமைகளோ, அல்லது விடுதலை புலிகள் அமைப்பின் தலைமையகமோ புரிந்து கொண்டு செயல்படவில்லை. ஆனால், அதன் ஆழ-அகலங்களை புரிந்து உணர்ந்து கொண்ட ரணில் தட்ட வேண்டிய இடத்தில் தட்டி, பெற வேண்டியதைப் பெற்றுக்கொண்டார். வடக்கு வாழ் தமிழர்களோ, கருணாவையும் துரோகி என்று முத்திரை குத்தி, தமது வன்மத்திற்கு தீனி இட்டுக்கொண்டனர்.

(5ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# 10 வயது சிறுமி விபத்தில் பலி!



அனுராதபுரம்தலாவபகுதியில் எரிபொருள் ஏற்றிவந்த பௌஸர் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சிறுமி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில்தலாவஆரம்ப பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் 10 வயதான சிறுமியே உயிரிழந்துள்ளார்.

கொழும்பு சப்புகஸ்கந்த பிரதேசத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த எரிபொருள் ஏற்றிவந்த பௌஸர் ஒன்றே மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் குறித்த சிறுமியின் தாய்க்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சிறுமி இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்ற இருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# மாலு பணிசால் பலியான 15 வயதுடைய மாணவன்!

கடந்த 2 ஆம் திகதியன்று பேக்கரி ஒன்றில் மாலு பணிஸ் ஒன்றை உட்கொண்ட 15 வயதுடைய மாணவனுக்கு ஒவ்வாமை ஏற்பட்டதை அடுத்து, நியாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதனையடுத்து குறித்த மாணவன் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் அரச இரசாயன பகுப்பாய்வாளர் அறிக்கையை எதிர்பார்ப்பதாக எல்பிட்டிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி பி.டபிள்யூ.எல்.எஸ் சந்தகென் வடுகே குறிப்பிட்டுள்ளளார்.

சடலத்தின் மாதிரிகள் அரசாங்க பகுப்பாய்வாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் மரணம் தொடர்பான தீர்ப்பை வழங்குவதற்கான அறிக்கைகளுக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அங்கும் பல ஒவ்வாமை அறிகுறிகள் தென்பட்டதைத் தொடர்ந்து அடுத்த நாள், எல்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக குறித்த மாணவன் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்சிகிச்சைகள்பலனின்றி மாணவன் உயரிழந்ததை அடுத்து சட்ட வைத்திய அதிகாரியால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உடற்பாகங்கள் அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (05)

# வயோதிப வாலிபர் சங்கம்.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)



**யார் தலைவர்?**

இன்று தமிழர்கள் முன்னால் இருக்கும் மற்றொரு கேள்வி, அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலில் தனியாக போட்டி இடுவதா, என்பதே. அது குறித்து, இப்போது கூடிப் பேசும் கட்சிகளில் சில ஒன்றிரண்டு தடவைகள் சந்தித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்களுடைய அடுத்த கட்டத் திட்டம் என்ன? தங்களில் ஒருவரை வேட்பாளராக முன்னிறுத்தி, தேசிய அரசியலில் தமிழர்களின் சக்தியை நிரூபிப்பதா? அல்லது, தமிழர்களின் வாக்கு வங்கியை முன்னிறுத்தி, ஒன்றிணைந்து, சிங்கள அரசில் தலைமைகளுடன் பேரம் பேசுவதா?



2019 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற கோட்டபாய ராஜபக்ச, தமி ழர்கள் வாக்குகள் இல்லாமலே வெற்றிபெற்றார். ஏன், தமிழர் பகுதிகளில் பரப்புரை செய் வதையே அவர் தவிர்த்தார். ஆனால், அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் நிலைமை வேறாக இருக்கும்.

அப்போது, ரணிலை ஆதரிப் பதாக இருந்தால், முன்பு சம்மந்தன் செய்த அதே தவறை இவர்களும் செய்துவிடக்கூடாது.

இனப்பிரச்சினை வேறு, தேர்தல் அரசியல் வேறு என்று அவர் விட்ட பிழைதான் இன்றைய நிலைமைக்குக் காரணம். மாறாக, ரணில் தனக்கு ஆதரவு கோரினால், அதற்கு முன்னர் பதிமூன்றை செயல்படுத்த வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கவேண்டும்.

**தனி நபர் துதி**

அதற்கு அப்பால், அந்த இனப்பேரத்தை இன அரசியலோடு நிறுத்திக்கொள்ளாமல், தமிழர்களிடையே தனி நபர் துதிபாட ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி கொள்வார்களா? இதுதானே கடந்த காலங்களில் அரங்கேறி உள்ளது.

தற்போதைய சூழலில், அனைத்து தமிழ் தலைமைகளும் ஒன்றிணைந்து செயலாற்றியும்கூட, ஒரு மனிதச் சங்கிலிப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய முடியவில்லை. அந்த தோல்வியைத் தொடர்ந்து, அதே தலைமைகளே அதே பிரச்சினைக்காக முழு கதவடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். அதாவது, முழு வெற்றி பெறுகிறதா என்று பார்ப்போம்.

இடைப்பட்ட காலத்தில், தமிழ் தரப்பு தனியாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதாக இருந்தால், அதற்கு எந்தக் கட்சிகள் எல்லாம் ஆதரவு தர இருக்கின்றன என்று பொறுத்திருந்து பார்ப்போம். தோல்வியே உறுதி என்ற நிலையில், யார் அந்த வேட்பாளர் என்பதும் தமிழர்களின் எதிர் கால அரசியலுக்கு ஒரு பாதையை அமைத்து கொடுக்கலாம்.

அதாவது, அனைத்து தலைமைகளுமாக, இன அரசியல் பொறுப்புகளை அடுத்த தலைமுறையினருக்கு விட்டுக் கொடுக்கிறார்களா, அல்லது, தங்களில் ஒருவரே வேட்பாளர் என்றுகூறி, அந்த வயோதிக வாலிப சங்கத்தினர் எல்லோரும் தங்களுக்குள்ளேயே, சண்டையிட்டுக் கொள்ளப் போகிறார்களா?

பொறுத்திருந்து பார்ப்போம்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தேசிய கீதம் தமிழில் பாடாததால் கவலை!

## அமைச்சர் டக்ளஸுக்கு வந்த மொழிப்பற்று



''யாழில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாதமை கவலையளிக்கின்றது' என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (என்.வி.கியு) கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை யாழ். சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடப்படாததை சுட்டிக்காட்டியிருந்தார்.

இது குறித்து அவர் தெரிவித்தவை வருமாறு -

தமிழர் பண்பாடு எனக் கூறி இங்கு சில நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும் இங்கு தேசிய கீதம் தமிழில் பாடப்படவில்லை. இது மனவருத்தத்துக்குரியது. நான் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகளிலும், வட மாகாணத்தில் நான் தலைமைத்துவம் வகிக்கின்ற நிகழ்ச்சிகளிலும் பொதுவாக தேசிய கீதம் தமிழிலேயே பாடப்படுவதுண்டு.

சிலவேளை வேறு அமைச்சர்கள் வருகின்ற போது என்னுடைய கையை மீறி போய் இருக்கலாம். அதை நான் கண்டித்ததுண்டு. இன்றைக்கும் ஒரு தவறை இங்கிருக்கும் அதிகாரிகள் விட்டு விட்டார்கள்.

இங்கு நடக்கின்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் தேசிய கீதம் தமிழில் பாடப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வலுவான கருத்து. சமீபத்தில் கூட ஜனாதிபதி மட்டக்களப்பிலும் இது தொடர்பான கருத்தை சொல்லி இருக்கின்றார். தேசிய விழாவில் கூட ஆரம்பத்தில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டு நிகழ்ச்சி முடிகின்ற நேரத்தில் தமிழில் பாடுவதற்கான ஏற்பாடு செய்திருக்கின்றார்.

அந்த வகையில் ஜனாதிபதியைப் பொறுத்த வகையில் அல்லது அவருடைய அரசாங்கத்தைப் பொறுத்த வகையில் கொள்கையும் செயற்பாடும் ஒன்றுதான். சில வேளைகளில் சில அதிகாரிகள் அவ்வாறான தவறுகள் விடுகின்றார்கள் ஆனபடியால் இங்கே முக்கியமான அதிகாரிகள் எல்லாம் இருக்கின்றார்கள் அவர்கள் வரும் சந்தர்ப்பங்களில் அவற்றைக் கருத்தில் எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன். -இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(05)

# ஓட்டோ உரிமையாளர்கள் யாழில் கவனவீர்ப்பு போராட்டம்







யாழ்ப்பாணத்தில் புதன்கிழமை காலை ஓட்டோ உரிமையாளர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.பண்ணையில்அமைந்துள்ள தூர இடங்களுக்கான பஸ் நிலையத்திலிருந்து, ஆரம்பமாகிய பேரணி யாழ். நகரில் முடிவடைந்தது.

அண்மைய நாள்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புதிய செயலி மூலம் ஓட்டோ சேவையை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக நீண்டகாலமாக ஓட்டோவைத் தமது வாழ்வாதாரமாக கொண்டு செயற்படுபவர்பவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள நிலையில் குறித்த போராட்டம் ஓட்டோ உரிமையாளர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## இந்து சமுத்திரம்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

சிறந்த ஆகமங்களையும் தோற்றுவித்துள்ளது.

இந்து சமயம், புத்த சமயம், சீக் சமயம், சமண சமயம் ஆகியன இந்த நாகரிகத்திலேயே தோற்றம் பெற்றன. இஸ்லாம் ஆகமமும் அரேபிய தீபகற்பங்களிலிருந்து வந்தவையாகும் என்ற வகையில் இவை அனைத்தும் எமது சிந்தனைகளின் தாக்கத்தை கொண்டுள்ளன.

பிரித்தானியாவினால் ஆக்கிரமிக்கப்பட்ட கலாசாரம் காணப்படுகின்றமை, ஒவ்வொருவருடனும் வர்த்தக் தொடர்புகளை கொண்டுள்ளமை, மோதல்களில் ஈடுபட்டுள்ளமை, ஒவ்வொருவருடனும் நாகரிக தொடர்புகளை கொண்ட பாரம்பரியங்களுக்கும் உரிமை கோருகிறோம். அதனை அழிக்கவோ துடைத்தெறியவோ எவராலும் முடியாது.

அதேபோல் பிரித்தானிய பொதுநலவாய சபை என்றால் என்ன? அதன் அதிகளவான உறுப்பினர்கள் இந்த வலயத்தை சேர்ந்தவர்கள். ஒவ்வொருவருக்கும் தொடர்புகள் உள்ளன. அதனால் எமக்குபொருத்தமானசிலஎழுச்சிகள் காணப்படுகின்றன. எமதுஎழுச்சிக்கு பொருத்தமான நடவடிக்கைகள் தொடர்பில் நாம் ஆராய வேண்டும்.

இந்து சமுத்திரம் என்பது ஆசிய- பசுபிக், இந்து - பசுபிக், மற்றும் ஒரே தடம் - ஒரே பாதை என்று எவருக்கும் சொந்தமில்லாத அரசியல் அமைப்பாகும். பல நாகரிகங்கள் இங்கிருந்தே தோற்றம் பெற்றுள்ளன. பிரித்தானிய மற்றும் மேற்கத்திய ஆதிக்கம் என்பன இந்து சமுத்திரத்திலேயே சரிவடைந்தன.

கொழும்பு மாநாடு, கொழும்பு பலவான்களின் மாநாடு, பெண்டுன் மாநாடு, ஆபிரிக்க- ஆசியவாதம் என்பனவும் இங்கிருந்தே ஆரம்பித்தன. அணிசேரா நாடுகளின் மாநாடும் இங்கிருந்தே ஆரம்பமாகியது. அதனால் நாம் அடிப்படையில் ஓர் அரசியல் அமைப்பாவோம்.

காலனித்துவம் சரிவடைந்தன் பின்னர் ஐரோப்பா தவிர்ந்த தரப்புக்களுக்களை நாமே ஏற்றுக்கொண்டோம். நாம் அனைவரும் ஏற்றுக்கொண்ட இந்து சமுத்திர வலயத்தின் அமைதிக்கான யோசனை எம்மிடத்தில் உள்ளது. அது மறைந்த தலைவர் நெல்சன் மண்டேலாவின் சமூக-பொருளாதார மற்றும் ஏனைய அணுகுமுறைகள், இந்து சமுத்திரம் தொடர்பான எண்ணக்கரு, ஜகார்த்தா ஒப்பந்தமும் எம்மிடத்தில் உள்ளன.

இவ்வாறு இந்து சமுத்திரம் தொடர்பில் பல்வேறு விளக்கங்கள் இருப்பதால், நாம் அரசியல் ரீதியாக ஆசிய - பசுபிக் அல்லது ஏனைய அமைப்புக்களிலிருந்து வேறுபட்டவர்கள். நாம் அரசியல் மயமானவர்கள் என்ற வகையில் அரசியல் ரீதியில் சிந்திக்கிறோம்.

உக்ரேன் போர் தொடர்பில் அனைவருக்கும் பல்வேறு எண்ணங்கள் இருக்கின்றன. அது பற்றிய தீர்வுகளின் நிலைப்பாடுகள் யாது? சீஷெல்ஸ் நாடு என்ன நினைக்கிறது? அது மிகச் சிறியதாக இருந்தாலும் மிகவும் முக்கியமான நாடாகும். மாலைதீவு என்ன நிலைப்பாட்டில் உள்ளது? அவர்கள் எவ்வாறு பதிலளிக்க போகிறார்கள். என்ற விடயங்கள் பாதுகாப்பு ஆய்வாளர்களினால் கருத்தில் கொள்ளப்படாவிட்டாலும் அவை முக்கியமான விடயங்களாகும்.

அடுத்ததாக கலாநிதி மஹாதேவ கூறியது போல கிழக்காசியாவில் ஏற்பட்ட அபிவிருத்தி தடைப்படாது. இந்து சமுத்திரத்தின் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு இணையாக 'கல்ப்' சமவாயத்தின் நாடுகளையும் நாம் சந்திக்கிறோம். அதனால் இந்து சமுத்திரத்திற்குள் இரு பெரும் பொருளாதார மத்தியஸ்தானங்கள் உருவாகி வருகின்றன.

2050 களில் ஆபிரிக்கா துரித வளர்ச்சியை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அது பற்றி அறியாதவர்கள் 2063 ஆபிரிக்க ஒழுங்கு பத்திரத்தை பார்க்க வேண்டும். மற்றுமொரு பெரும் பொருளாதார கேந்திர நிலையமாகவும் இது மாற்றமடையலாம். மேற்கு, ஆசிய மற்றும் இந்திய பொருளாதார கேந்திர நிலையங்கள் என மூன்று பிரிவுகள் உருவாகலாம்.

வர்த்தக்கத்திலும் எமக்கான தனித்துவங்கள் உள்ளன. இந்து சமுத்திரத்தில் இலங்கை மூலோபாய அமைவிடத்தை கொண்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தைஅபிவிருத்திசெய்தால் வலயத்தின் மிகப்பெரிய விநியோக மத்தியஸ்தானமாக உருவெடுக்கும். அதனால் கிழக்கு இந்திய சமுத்திர அபிவிருத்தியின் பிரதிபலன்களை நாமும் அடைந்துகொள்ள முடியும்.

அதேபோல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை ஆபிரிக்காவுடன் தொடர்புபடுத்தினால் அதனையும் வர்த்தக துறைமுகமாக மாற்ற முடியும். நாகரிகம் மற்றும் வர்த்தகத்திற்கு இடையிலான தொடர்புகளை உரிய வகையில் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

எமக்கு துறைமுகங்கள் முக்கியமானதாகும். இன்று உலகின் பிரதான துறைமுகங்கள் வரிசையில் டுபாய் துறைமுகம் இணைந்துள்ளது. அதேபோல் மேலும் பல துறைமுகங்களும் இணைந்துள்ளன. இலங்கையும் இந்தபோட்டிக்குள்இருக்கவேண்டும் என்பதால் எம்மால் முடியுமாயின் மற்றுமொரு துறைமுகத்தையும் உருவாக்குவோம்

குறிப்பாக இன்று ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கத்தார் ஆகிய விமான நிறுவனங்கள் உலக அளவில் பிரதானமாக ஆதிக்கம்செலுத்துகின்றன. மேலும், கத்தார் இன்று விமான நிலையத் துறையில் பிரவேசித்துள்ளது. எனவே உங்களுக்கு இந்தத் துறையிலும் மேம்படும் புதிய போக்குகள் உருவாகுவதைக் காணும் திறன் உள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் ஏற்கனவேகிரிக்கெட் விளையாட்டில் இடம்பிடித்து விட்டன. குறிப்பாக ஐ.பி.எல் போட்டியில் இந்தியா அதை வெளிப்படுத்தி வருகிறது. மெரிலபோன் கிரிக்கெட் கழகம் தொடர்ந்தும்கிரிக்கெட்விளையாட்டின் தாயகமாக இருக்காது. அதைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமாயின் ஐ.பி.எல் போட்டியைப் பாருங்கள். மேலும், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார், ஐரோப்பாவின் கால்பந்து கழகங்களைக் கைப்பற்ற முயற்சிப்பதை நீங்கள் காண்பீர்கள். எனவே இதுதான் இப்போது நிகழும் புதிய நிலைமையாகும்.

இன்று நாம் ஆசியாவின் எல்லா இடங்களிலும் பயணிக்கிறோம். அந்த நிலையில் நாம் இந்து-பசுபிக் பகுதியை நிராகரிக்கிறோம் என்று அர்த்தமில்லை. இந்து சமுத்திரத்திற்கும் பசுபிக் சமுத்திரத்திற்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது.

இஸ்லாம் மதத்தைப் பாருங்கள். அது மத்திய கிழக்கில் இருந்து வந்து இன்று பிலிப்பைன்ஸ் வரை பரவியுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் நேபாளம், பூட்டான், இந்தியா, மற்றும் இலங்கை ஆகிய நான்கு நாடுகள் மாத்திரமே இஸ்லாம் அல்லாத நாடுகளாக இருப்பதாக நான் நினைக்கிறேன்.

இலங்கையில் தேரவாத பௌத்தத்தை கவனித்தால், அது மியன்மார், தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, தென் வியட்நாம் ஆகிய நாடுகளில் பரவியது.

மேலும், சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே பட்டுப்பாதையில் பெரும் தொடர்புகள் உள்ளன. இந்தியா புத்த மதத்தை நாடு முழுவதும் பரப்பியது. சீனா இந்தப் பக்கம் வந்தது. எனவே, இந்த எல்லா விடயங்களிலும் ஒரு தொடர்பு உள்ளது.

இலங்கையில் உள்ள நாம் இந்து-பசுபிக் பிராந்தியத்தை ஆசியானின் பார்வையின்படி இரண்டு வெவ்வேறு சமுத்திரங்களாக அங்கீகரிக்கிறோம். அது ஒரு தனி சமுத்திரம் என்று ராம் குறிப்பிட்டார். இது ஒரு தனித்துவமான சமுத்திரமாகும்.

உலகளாவிய புவிசார் அரசியலில் நாம் எடுக்கும் நிலைப்பாடு நமது போக்கைத் தீர்மானிக்கும். ஆனால் இந்து சமுத்திரத்தில் கடல்சார் சுதந்திரம் மற்றும் கடலுக்கடியில் அமைக்கப்படும் கேபிள்களின் பாதுகாப்பையும் நாம் உறுதிசெய்ய வேண்டும். அதனால்தான் நாம் இப்போதே முன்னேற முயற்சி எடுக்க வேண்டும்.

புதிதாக உருவாகும் ஒழுங்கு என்ன? கடந்த வாரம் நான் ஓய்வாக இருக்கும்போது இந்தப் புதிய வளர்ந்து வரும் ஒழுங்கைப் பற்றிக் கூற சில விடயங்களைக் குறித்துக் கொண்டேன். ஆனால் நேற்று நான் அதைக் கிழித்துவிட்டேன். இந்த இடைவெளிக்குள் என்ன நடந்தது என்று நான் கூற வேண்டியதில்லை. ஆனால் இஸ்ரேலில் ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு இப்போது என்ன நடக்கப் போகிறது என்பதில் இது தாக்கம் செலுத்துகின்றது.

அரசியல் அந்த இடத்திற்கு வந்திருப்பதைப் பார்க்கிறீர்கள். இஸ்ரேல் ஏற்கனவே ஒரு கூட்டாட்சியை அமைத்துள்ளது. ஹமாஸை அழிப்பது ஒரு விடயம். கஅதற்குஎதிராகஅவர்கள்இராணுவ நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் காசா பகுதி அழிக்கப்பட்டால் என்ன பதில்கிடைக்கும்? 24 மணிநேரத்தில் முழுமையாக நிலை மாறிவிடும்.

இங்கு அரசுகளால் கட்டுப்படுத்த முடியுமான எதுவும் இல்லை. இங்கிருந்து இந்தோனேஷியாவரை அல்லது வேறு இடங்களில், அரசுகள் நிலைமையினைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை இழந்து வருகின்றன. இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்றாலும் அதைப் பற்றி நான் எதுவும் கூறமாட்டேன். ஆனால் நாம் என்ன செய்ய முடியும்? இஸ்ரேலில் கூட்டு ஆட்சி உள்ளது, காஸாவை நோக்கினால், மத்திய கிழக்கு முழுவதும் தீப்பிடித்துவிடும் என்பதால், இங்குள்ள நம் அனைவரையும் இது பாதிக்கிறது.

ஒரு எல்லையில் துருக்கி வரையிலும், மறுமுனையிலிருந்து பிலிப்பைன்ஸ் மற்றும் சின்ஜியாங் உட்பட மத்திய ஆசியாவையும் இது பாதிக்கிறது. இன்று இந்த நிகழ்வில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன் என்றார்.

## ஐக்கிய அரபு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது வர்த்தகம், எரிசக்தி மற்றும் சுற்றுலாத்துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடுகளை அதிகரிப்பதற்காக பொருளாதார கூட்டு பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் தூதுக்குழுவில் தூதர் காலித் நாசர் அல்-அமெரி, வெளியுறவு அமைச்சர் அலுவலக இயக்குனர் சுல்தான் அல் மன்சூரி மற்றும் பொருளாதார மற்றும் வணிக விவகாரங்கள் துறையின் துணை இயக்குனர் காடா அல் நபுல்சி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இந்து சமுத்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

தொற்றுநோய்க்குப் பிறகு, உலகில்ஒருபுதியமுறைமையொன்று வடிவம் பெறுகிறது. இது பலமுனை மாத்திரமல்ல, எதிர் துருவங்கள் ஆகவும் இருக்கும். இதன் மூலம் நான் குறிப்பிடுவது தொழில்நுட்ப ஜாம்பவான்கள், உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்கள், உலகளாவிய அரசசாரா அமைப்புகள், நாடுகடந்த பயங்கரவாத குழுக்கள், அடிப்படைவாத ஆன்மீக மற்றும் மத இயக்கங்கள் போன்ற அரச சாரா செயற்பாட்டாளர்கள், இவை அனைத்தும் மக்கள் மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

மாற்றங்கள் எப்போதும் அமைதியாக இருப்பதில்லை. கிழக்கு ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியாவில் நாம் காணும் போர்கள் மற்றும் வன்முறைகளும் அவற்றில் அடங்கும். இஸ்ரேலில் ஹமாஸின் பயங்கரவாத நடவடிக்கைகளாலும், அந்த பிராந்தியங்களில் நடந்த போர்களாலும் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எனது இரங்கலை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமுத்திர பிராந்திய எல்லை நாடுகள் ஒன்றியத்தின் அமைச்சர்கள் குழுவின் 23 ஆவது கூட்டத்தை இலங்கை நேற்று நடத்தியது மற்றும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இந்த முக்கியமான பிராந்திய சங்கத்தின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.

தற்செயலாக, இந்த சங்கத்தின் உபதலைவர்பதவியையும்இந்தியா ஏற்றுக்கொண்டது. பிராந்தியத்தின் நிலைபேறான அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், வளர்ந்து வரும் உலக ஒழுங்கில் செல்ல உதவுவதற்கும் ஒரு தளமாக இந்து சமுத்திர எல்லை நாடுகள் ஒன்றியத்தை உருவாக்க எங்கள் இரு நாடுகளும் இணைந்து செயல்பட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்தப் பிராந்தியம், அனைவரினதும்செயற்பாடுகளுக்கும்சட்டத்தின் ஆட்சி தொடர்பான வழிகாட்டும் சுதந்திரம், வெளிப்படையானமற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய பிராந்தியமாகக் கட்டியெழுப்ப நாம் அர்ப்பணிக்க வேண்டும். மேலும் கடல்எல்லைகளைகடற்கொள்ளை, அதிகப்படியான சுரண்டல் மற்றும் பயங்கரவாதத்திற்குப் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்திற்கு 25 ஆண்டுகள் ஆகிறது. என்னைப் பொறுத்தவரை இதுவரை பயணித்த பாதையில் அது பல மைல்கற்களைக் கடந்திருக்கிறது. ஆனால் இந்து-பசுபிக் என்ற புதிய பெயரில் அறிமுகமாதல் சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததுடன், அது விரைவில் உலகளாவிய கவனத்தையும் ஈர்ப்பையும் பெற்றது.

25 வருடங்களில் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்திற்கான இந்து சமுத்திர மூலோபாயத் திட்டத்தை எந்த நாடும் வெளியிடவில்லை. எவ்வாறு இருந்தாலும், தற்போது, கனடா முதல் தென் கொரியா வரையிலான பல நாடுகள் இந்து- பசுபிக் வியூகம் என்று அவர்கள் அழைப்பவற்றை வெளியிட்டுள்ளன. இந்து-பசுபிக் பிராந்தியமான இந்து சமுத்திர எல்லை நாடுகள் இந்த நூற்றாண்டின் மிக முக்கியமான அதிகார வழித்தடங்களாக உருவெடுத்துள்ளன என்பதை மறுக்க முடியாது என்றார்.

## போர் பற்றிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கத்திலுமே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. நாட்டு மக்கள் அச்சமோ சந்தேகமோ இன்றி வாழக்கூடிய சூழல் இருக்க வேண்டும். மேலும், முதலீட்டு வாய்ப்புகளைப் பெறுவதில் ஒரு நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகின்றது.

பௌதீகப் பாதுகாப்பு மாத்திரமன்றி பொருளாதாரப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தனிநபர் பாதுகாப்பு ஆகியவையும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் மாத்திரம் சுமார் 27,000 பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். முப்பது ஆண்டுகாலப் போரில் சுமார் 29,000 பேரே இறந்தனர். தற்போது, நாட்டில் வீதி விபத்துகள் அதிகமாக இடம்பெறுகின்றன.

அதேபோன்று, போதைப்பொருளும் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கிறது. வலுசக்தி, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவையும் தேசிய பாதுகாப்பின் கீழ் அடங்குகின்றன. எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதம், அடிப்படைவாதம், போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் உள்ளன. ஆனால், இவற்றையெல்லாம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் தடுப்பது ஒரு அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நாம் துறைசார் மேற்பார்வைக் குழுவாக, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு உயரிய பங்களிப்பை வழங்குவதற்காக நாங்கள் செயற்பட்டு வருகிறோம். பிரிவினைவாத அடிப்படையிலான பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைவாதம் என்பவற்றை பௌதீக ரீதியான அச்சுறுத்தல்கள் என்று அழைக்கலாம்.

அதேபோன்று, ஜெனிவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமை அமர்வுகளிலும் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாக பல்வேறு வகையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

சர்வதேசமல்லாத ஒரு ஆயுதப் போராட்டமே இலங்கையில் இடம்பெற்றது. எனவே, நாட்டில் எவ்வாறானதொரு யுத்தம் இடம்பெற்றது என்பதை விளக்கும் வகையில், எமது மேற்பார்வைக் குழுவின் பங்களிப்புடன் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைக் குழுவுக்கு இப்போதேனும் நாம் உண்மை நிலையைப் புரிய வைக்க வேண்டும். இதனால், தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப் படவுள்ளது. நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் உண்மை நிலை அதில் விளக்கப்பட்டுள்ளது என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரசிங்க உலகத்தை வலம் வருகிறார். ஆனால் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு எட்டப்படவில்லை. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் தீர்மானங்களை முன்னெடுக்கிறது.

சர்வதேசநாணயநிபந்தனைக்கு அமைய வரி உட்பட அத்தியாவசிய சேவை கட்டணங்கள் உயர்வடைந்துள்ளன. மின்கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் மின்கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் யோசனை முன்வைத்துள்ளது.

மின்சார சபை எதிர்கொள்ளும் நட்டத்தை முகாமைத்துவம்செய்துக் கொள்வதற்காகவே மின்கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப் படுகிறது. மின்சார சபையின் ஊழல் மற்றும் வீண் செலவுகளை கட்டுப்படுத்தினால் முறையற்ற மின்கட்டண அதிகரிப்பை தடுக்கலாம்.

தேர்தல் ஊடாகவே ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதனால் தான் காலத்துக்கு காலம் தேர்தல் நடத்தப்படுகிறது. நாட்டு மக்கள் போராட்டத்தின் ஊடாக ஆட்சிமாற்றத்தை ஏற்படு;த்தினார்கள். அதுவும் தற்போது ஸ்திரமற்றதாக காணப்படுகிறது. மக்களின் தேர்தல் உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேர்தல் முறைமையை திருத்தியமைக்கும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. தேர்தலை பிற்போடுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையானவர்.

பெண் பிரநிதித்துவத்தை அதிகரிப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைத் தேர்தல் முறைமையை திருத்தம் செய்தார். இறுதியில் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை வரையறை செய்வதாக குறிப்பிட்டுக் கொண்டு எல்லை நிர்ணயம் புதிதாக வகுக்கப்பட்டது. தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் தேர்தல் முறைமையை திருத்தம் செய்யும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை பிற்போடுவது கடினமானதல்ல. ஆகவே எதிர் வரும் ஆண்டு ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் இடம் பெறுவது சந்தேகத்துக்குரியதாகும். தேர்தலுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களின் பாராளுமன்ற உறுப்புரிமைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது எமக்கு எதிராக பொதுஜன பெரமுனவினால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# வழிபாடு இன்றியமையாதது!




இந்துசமயத்தில்வழிபாடுஎன்பதுஇன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது. மக்கள் மத்தியில் கடவுள் நம்பிக்கை தோன்றிய காலம் முதல் இன்று வரை வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது என்றே கூறலாம். அதாவது மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வழிபாடு செய்வது இன்றியமையாததாகும். வேத ஆகமத்தில் இவ்வழிபாடு பற்றியும் வழிபாடு நடாத்தும் முறை பற்றியும் வகுத்துக் கூறியுள்ளனர். அந்த வகையில் காலத்துக்கு காலம் வழிபாட்டு முறை மாறினாலும் வழிபாடு மாறவில்லை. அன்றும் இன்றும் தொண்று தொட்டு நடைபெற்று வருகின்றது. கடவுள் நம்பிக்கை மக்களிடம் தோன்றும் காலத்திலிருந்தே கடவுள் பற்றிய அச்சம் மக்களிடம் காணப்பட்டது. அதன் வழியே அச்சத்தின் பெயரால் வேதகால மக்கள் இயற்கை



அம்சங்களைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டனர் என்று வரலாறு கூறுகின்றது.

அந்தவகையில் இயற்கை அம்சங்களான சூரியன், சந்திரன், விலங்குகள், மரங்கள், பஞ்சபூதங்கள் போன்றவற்றிற்குத் தெய்வாம்சம் கொடுத்து இவற்றிற்கு அஞ்சிப் போற்றி வழிபட்டனர். இதனையே வேத காலத்தில்வாழ்ந்தமக்கள்ஒவ்வொருஇயற்கை சக்திகளுக்கும் ஒவ்வொரு தெய்வங்களை வழிபட்டதாக சான்றுகள் காட்டுகின்றது.





எடுத்துக்காட்டாக 33 தெய்வங்களை வழிபட்டதாகவும் அவற்றை யப்சர் என்றும் அறிஞர் மண்ணுலக தெய்வம் , இடையுலக தெய்வம், விண்ணுலக தெய்வம் என்னும் மூன்றாக வகைப்படுத்தினர் என்றும் கூறப்படுகின்றது. உதாரணமாக உசை புசன் வருணன் இந்திரன் வாயு உத்திரன் அக்கினி போன்ற தெய்வங்களை வழிபட்டதாக சான்றுகள் பகர்கின்றது.

அன்று வெறும் இயற்கை அம்சங்களைத் தெய்வமாக வழிபட்ட மக்கள் இன்றைய சைவ ஆலயங்களில் சூரியன். சந்திரன், உருத்திரன் போன்ற உருவங்களும் விலங்குகளான சிங்கம்.புலி பசு. நாய் போன்ற எனக் குறிப்பிட்ட மிருகங்களை இறைவனின் வாகனச் சிற்பங்களாகவும் மரங்களைத் தல விருட்சமாகவும் அன்றும் வழிபட்டு வருகின்றனர்என்றேகூறலாம். இந்த இயற்கை வழிபாடு சிறுக சிறுக வளர்ந்து சங்க காலத்தில் வாழ்ந்த ஐவகை நில மக்களும் வருணன், இந்திரன், திருமால், முருகன் கொற்றவை போன்ற கடவுளுக்கு உருவ வழிபாட்டுடன் வழிபடத் தொடங்கினர். உதாரணமாக சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் அத்தகைய தெய்வங்களை வணங்கும் போது உணவுப் பொருட்களைப் படைத்தல்போர்செல்லும்போது பலியிடுதல் போன்றவற்றைச் செய்து மிக்க பக்தியோடு வழிபட்டனர் என்றே கூறலாம். இவ்வாறான சைவ வழிபாட்டு மரபுகள் சங்க காலத்திலிருந்து இன்று வரை வழக்கத்திலுள்ளன. சைவ சமயம் உருவ வழிபாட்டைக்கொண்ட சமயமாகும்.

கடவுளுக்கு பலவிதமான உருவங்களை சிலையாக வடித்து அவற்றை நிறுவி நாள்தோறும் வழிபட்டு வருதல் சைவ சமயத்தின் வழக்கமாயிற்று. பின்னர் அந்த உருவங்கள் எல்லாவற்றையும் ஓரிடத்தில் வைத்து வழிபட்டதால் அது திருக்கோவில் வழிபாடாயிற்று. முதல் முதலாக பல்லவர் கால மன்னர்கள் குடைவரைக் கோவில்கள் மலைத்தளிகள் கட்டுத்தளிகள் என்பவற்றை அமைத்து இறைவனுக்கு கற்சிற்பம் வைத்து வழிபட்டனர் என்றும் சான்று பகர்கின்றது. பின்னர் சோழர் காலத்தில் அந்த சிறிய கோவில்கள் பெரிய கட்டுமானக் கோவில்களாக எழிர்ச்சி பெற்றன. உதாரணமாக தஞ்சைக் கோவில் காஞ்சி கைலாய நாதர் கோவில. வானவன் மாதேவி ஈச்சரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்டவாறு உருவ வழிபாட்டில் வழிபடத் தொடங்கிய பிறகு தான் வழிபாட்டு முறைகளும்விழாக்களும்சிறப்புப்பூசைகளும் தோன்றிற்று. என்று கூறலாம். சிறப்புப் பூசைகளாக மகோற்சவம் கும் பாபிஷேகம் போன்றவற்றைக் கூறலாம். அதன் போது விக்கிரகங்கள்உலாவாகவலம்வருதல்யாகம் மற்றும்இறைவனுக்கு சிறப்பாக அலங்காரம் செய்தல் போன்றனவும் இடம்பெறும். மேலும் விழாக்களாக நவராத்திரி, சிவராத்திரி விநாயகர் சதுர்த்தி கந்த சஸ்டி கார்த்திகை தீப விழா போன்ற விரதங்களையும் குறிப்பிடலாம். இவை அனைத்தும் ஆலய அமைவிடத்தைப் பொறுத்தே சிறப்பாக நடைபெறும். நாள்தோறும் கோவிலத் துப்பரவு செய்தல் ,விளக்கேற்றல் மாலை



சாத்துதல் தினமும் விக்கிரகங் களை நீராட்டுதல், அபிஷேகம் செய்தல், உணவுப்பொருட்களைப் படைத்தல் , அலங்காரம் செய்தல் போன்றன ஆலயங்களில் அன்றாட வழிபாட்டில் செய்தனர் ஆலயங்களில் 6 காலப் பூசை களான கால சந்தி சாய ரட்டை உச்சிக்காலம் உஸாக்காலப்பூசை அர்த்த சாமம் காலப் பூசை போன்றன நடைபெறும்.

மேலும் இந்துக்களின் மூல இலக்கியமாக விளங்கும் ஆகமத்தில் சரியை நெறி கூறப் படுகின்ற புற வழிபாடு இறைவனை சரீரத்தால் வழிபடுதலாகும். அதாவது ஆலயத்தில் தொண்டு செய்தல் என்பன உள்ளடக்கப்படுகின்றது. உதாரணமாகக் கோவிலை சுத்தம் செய்தல் மாலை கட்டுதல் தேவாரம் பாடுதல் நறுமணம் மிக்க பூஞசோலைகளை அமைத்தல் பொன்றவற்றைக்குறிப்பிடலாம். இதனையே அப்பர் 'சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்' என்ற தேவாரம் மூலம் கூறியுள்ளார். அதேபோல் கிரிகை நெறி விதிப்படி அகத்தினால் செய்யும் வழிபாடாகும். அதாவது சிவ சின்னம் அணிதல் சிவ நாமம் ஓதுதல் சிவலிங்கப்பூசை போன்றன அடங்கும். இந்துக்களிடையே ஆலயமும் ஆலய வழிபாடும். இன்றியமையாத இடத்தினைப் பெற்றுள்ளது என்றே கூறலாம்.

அடுத்து வீடுகளில் வழிபாடு ஆத்மாத்த வழிபாடு எனப்படும். அதே போல் ஆலயங்களில் நிகழும் வழிபாடு பரார்த்த வழிபாடு என்றழைக்கப்படும். இவ்விரு வழிபாட்டிலும் இறைவன் திருவுருவப் படங்களில் அபிசேகம் அர்ச்சனை என்பன நிகழும். அந்தவைகயில் இரு வழிபாட்டிலும் இறைவனுக்கு வழிபாடு செய்யும் போது தூய்மையான தோய்துலர்திய ஆடை அணிந்து திரு நீறு அணிய வேண்டும். மலர்கள் பறித்து இறைவனுக்கு சாற்றுதல் கோவிலுக்கு செல்லும் போது தேவையான பொருட்கள் அர்ச்சனைப் பொருட்கள் என்பவற்றைக்கொண்டுசெல்லல்வேண்டும். என்று கூறுப்படுகின்றது. அதனாலேயே இறைவனை வழிபடும் போது ஐம்பொறிகளாலும் மனம் சஞசலம் அடையாமலும் வழிபட வேண்டும் என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

மேலும் இந்துக்களிடையே ஆலயமும் வழிபாடும் செல்வாக்குப் பெற்றுள்ளது. என்றே கூறலாம். இதனையே ஆலயம் தொழுவதும் சாலமும் நன்று என்றுஆன்றோர்கூறகின்றனர். மகோற்சவம் ஆகமம் சார்ந்த வழிபாடாகும். அது கொடித்தம்பம் முதல் 10 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். மகோற்சவம் ஆரம்பமானதை அடுத்து கிராம சாந்தி வாஸ்து சாந்தி என்பன இடம்பெறும். பின்னர்கொடியேற்றவாகனத்திருவிழா தேர்த்திருவிழா மெளனோற்சவம் தீதர்த்தோற்சவம் என்பன ஐந்தொழில்தத்துவத்தைஉணத்திநிற்கின்றன.

அடுத்துதிராவிட மக்கள்பலதெய்வங்களை வழிபட்டாலும் மேலான தெய்வமாக சிவனை வழிபட்டனர். என்று கூறப்படுகின்றது. இராமாணயணத்தில் பலவிதமான வழிபாட்டு முறைகள் காணப்பட்டதாக இராமாயணம் கூறுகின்றது. அதாரமாக கேள்வி சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. மேலும் அக்கினி வழிபாடு நதிவழிபாடு இராமலிங்க வழிபாடு போன்றன இடம்பெறுகின்றன என்று சான்று பகர்கின்றது. மர வழிபாடு உதாரணமாக கியாமா என்ற வழிபாட்டை சீதை வழிபட்டாள்.

மேலும் சைவ வழிபாட்டு மரபில் சிவன் இனறியமையாத இடமாக அமைந்துள்ளார். என்றே கூறலாம் ஏனெனில் திராவிட மக் கள் முதல் இன்று வாழும் மக்கள் ஈறாக சிவனை வழிபட்டு வருகின்றனர்.

சிவனே சைவ மக்களின் முழுமுதற் கடவுளாக விளங்குகின்றார். அந்தவகையில் சிவனின் வழிபாட்டு முறைகளாக சிவராத்திரி ஏகாதசி விரதம் பிரதோசம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அது மட்டுமல்லாது வேத காலத்தில் உருத்திரனுக்குப் பல நாமம் கூறி வழிபட்டதாக யசுர் வேதத்தில் சது குத்திரியம் என்னும் பகுதி சான்று பகர்கின்றது. இவையே இந்துக்களின் சைவ வழிபாட்டு மரபுகள் எனக்கூறிக்கொள்ளமுடியும்.

ப. திவ்யா,
யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.

காலைக்கதிர் Kalaikkathir

# பல்கலைக்கழக விடுதிகளை சோதனைக்குட்படுத்த முடிவு!

## அமைச்சர் ராகவன் அதிரடி



'பல்கலைக்கழக விடுதிகளை இரவு வேளைகளில் சோதனைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளதாக' உயர்கல்வி இராஜாங்க அமைச்சர், சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விடுதிகளில் இடம்பெறும் பகிடிவதைகளைத் தடுக்கும் விதமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -விடுதிகளில் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 05 மணி வரையான காலப்பகுதியில் அதிகளவிலான பகிடிவதைகள் இடம்பெறுவதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்நிலையில் பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்கான தேசிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நடவடிக்கையில் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரிகளும், மாணவ ஆலோசகர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதுமட்டுமல்லாது பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக வட்ஸ் அப்ஸ்ரீ இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விரைவான விசாரணைகள்ஆரம்பிக்கப்படும்.-இவ்வாறு சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (05)

# புலி அமைப்பின் வாலை மட்டுமே எம்மால் அழிக்க முடிந்துள்ளதாம்!

## சரத் வீரசேகர கவலை



தோட்டாக்களால் பெற்றுக் கொள்ள முடியாதுபோன தமிழீழத்தை, 13 இன் ஊடாக பெற்றுக் கொள்வதே சிலரின் இலக்காகும்என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எல்.டி.டி.ஈ. அமைப்பை நாம் பெரும்பாலும் அழித்துள்ளோம். ஆனால், நாம் புலி அமைப்பின் வாலை மட்டும்தான் அழித்துள்ளோம்.

அதன் தலை உள்ளிட்ட ஏனைய பகுதிகள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இன்னமும் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

தமிழ் பிரிவினைவாத புலம்பெயர் அமைப்புக்கள், தங்களின் கனவை இன்னமும் விடவில்லை.

தோட்டாக்களால்பெற்றுக்கொள்ள முடியாதுபோன தமிழீழத்தை, 13 இன் ஊடாக பெற்றுக் கொள்வதே இவர்களின் இலக்காகும்.

இதனால்தான், நாம்போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக ஜெனிவாவில் இவர்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

அத்தோடு, வடக்கு கிழக்கிலுள்ள பௌத்த புராதன சின்னங்களை அழிக்கும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

யுத்தத்திற்கு பின்னர் 12 ஆயிரத்து 422 புலி உறுப்பினர்களை நாம் புனர்வாழ்வளித்து, சமூக மயமாக்கியுள்ளோம்.

பயங்கரவாதத்தை நாம் கட்டமைப்பு ரீதியாக இல்லாதொழித்தாலும், அவர்களின் ஈழக் கனவு இன்னமும் இருப்பதால், எமக்கு இன்னமும் அச்சுறுத்தலான சூழல் தொடர்ந்துக் கொண்டுதான் இருக்கிறது.

இந்த நிலையில்தான் மீண்டும், எல்.டி.டி.ஈ. அமைப்புதலைத்தூக்கிவருவதாக இந்தியாவிலிருந்து எமக்கு புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இதுதொடர்பாகஇராணுவப்புலனாய்வுத் துறையினர், ஆராய்ந்து வருகின்றனர். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)



# நடிகர் ஜக்சனின் பூதவுடலுக்கு பெருமளவான மக்கள் அஞ்சலி!

மறைந்த நடிகர் சகலகலா சக்திய ஜாக்சன் ஆண்டனியின் பூதவுடல் கடவத்த பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை பொரளையில் உள்ள ஜெயரத்ன மலர்சாலையில் வைக்கப்பட்டிருந்த உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த கலைஞர்கள், அறிஞர்கள், அரசியல்வாதிகள், மகாசங்கத்தினர் உள்ளிட்ட மதத் தலைவர்கள், ஜாக்சன் அந்தோணியை விரும்பும் ரசிகர்கள் என ஏராளமானோர் வருகை தந்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

பொரளையில் உள்ள மலர் சாலையில் காலை 07.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணி வரை வைக்கப்பட்டிருந்த பூதவுடல் செவ்வாய்க்கிழமை இரவு கடவத்தையில் உள்ள அவரது வீட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

புதன், மற்றும் வியாழன் அவரது இல்லத்தில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் 3 மணியளவில் ராகம புனித பீட்டர் பால் தேவாலயத்தில் இடம்பெற்றன. (05)

# இராணுவ அதிகாரியின் வீட்டில் திருடப்பட்ட துப்பாக்கி மீட்பு!

இலங்கை இராணுவத்தின் காலாட் படை முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து திருடப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று அந்த முகாமில் பணிபுரியும் இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருடப்பட்ட துப்பாக்கி குறித்த இராணுவ அதிகாரியின் படபொல பிரதேச வீட்டின் மரத்திற்கு அடியில் இருந்து மீட்கப்பட்டதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவ காலாட் படை முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் ஆயுதங்களை சோதனை செய்து சீல் வைக்கும் நடவடிக்கையின் போது குறித்த துப்பாக்கி திருடப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகளின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இலங்கை இராணுவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



# ஐக்கிய அரபு இராச்சியத்துடன் கூட்டுப் பொருளாதார சபை!

## இலங்கை முன்மொழிவு

ஐக்கிய அரபு இராச்சியத்துடன் கூட்டு பொருளாதார சபையை அமைப்பதற்கு இலங்கை முன்மொழிந்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான அமைச்சர் அஹமட் பின் அலி சயேக் ஆகியோருக்கிடையில்அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் குறித்த யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடுகளை அதிகரிப்பதாகவும்;, பொருளாதார கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் உத்தியோகபூர்வ பேச்சுகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார். (05)

# மொரட்டுவவில் வீதிக்கு வந்த முதலையால் பெரும் பரபரப்பு!

மொரட்டுவ, லுனாவ பகுதியில் சுமார் 8 அடி நீளமான முதலையொன்று நேற்று (வியாழக்கிழமை) அப்பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கும், பொலிஸாருக்கும், தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.(05)

# கோட்டாவால் தான் நாடு சீரழிந்துள்ளது

## ஆஷூ மாரசிங்க சாட்டை



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் தான் நாடு சீரழிந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில் 850 - 900 பில்லியன் வருமானம் நாட்டுக்கு இல்லாமல் போனது.

இதனால்தான் டொலர் தட்டுப்பாடுக்கு நாம் முகம் கொடுத்தோம். நாட்டுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்காக மத்திய வங்கி பணத்தை அச்சிட்டதை அடுத்துதான் பொருளாதார சிக்கல் ஏற்பட்டது.

தனக்கு நெருக்கமான பெரு வியாபாரிகளுக்கு சலுகை வழக்கும் வகையில்தான் முன்னாள் ஜனாதிபதி 900 பில்லியன் ரூபா வரி வருமானத்தை இல்லாமல் செய்தார்.

இதனால்ஏற்பட்ட பொருளாதார சிக்கலுக்கு தான் நாம் இப்போது- வரைமுகம்கொடுத்துவருகிறோம்.

இதிலிருந்து மீள்வதற்காக இன்னமும் சிறிய காலம் மக்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டியேற்படும்.

ஆனால், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மக்களுக்குத் தேவையான உரிய நிவாரணங்களை வழங்குவார் என நாம் நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள போதிலும் நெடுஞ்சாலையில் பஸ்கள் சேவையில்!

## போக்குவரத்துச் சபை அறிவிப்பு

*மண்சரிவு ஏற்பட்டுள்ள போதிலும், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் வழமை போன்று இயங்குகின்றன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.*

*மண் சரிவு காரணமாக பின்னதுவ மற்றும் இமதுவ இடையே வாகன போக் குவரத்து தடைபட்டுள்ள போதிலும், பஸ்கள் வழமை போன்று இயங்கி வருகின்றன என அறிவித்துள்ளது. இதன்படி, காலி திசையிலிருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நுழையும் வாகன சாரதிகள் இமதுவ சந்தியில் இருந்து வெளியேறுமாறும், கொழும்பு திசையில் இருந்து வரும் வாகன சாரதிகள் பின்னதுவ சந்தியில் இருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*(05)*


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SEARCH NEAR VEHICLES
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர்
Kalaikkathir

# ஹெரோய்ன் கடத்திய குற்றச்சாட்டு; 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு!

## கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

நான்கு வருடங்களுக்கு முன்னர், மீன்பிடிக் கப்பல் மூலம் இலங்கைக்கு ஹெரோய்ன் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஈரான் நாட்டைச் சேர்ந்த 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிபதி அமல் ரணராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

குற்றவாளிகள் 9 பேரும் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி அக்குறள பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



# கடற்கரையில் துண்டிக்கப்பட்ட நிலையில் மனிதத் தலை மீட்பு!

## பமுனுகமவில் சம்பவம்

பழைய அம்பலம கடற்கரையில் துண்டிக்கப்பட்ட நிலையில் மனிதத் தலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட சம் பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை பமுனுகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே குறித்த மனிதத் தலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தலையானது அடையாளம் காண முடியாத அளவிற்கு சிதைவடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# நாட்டில் இலவசக் கல்வி இல்லாமல் போகும் நிலை!

மாணவர்களுக்கு பாடசாலை வருகை கட்டாயமானது எனவும் பாடசாலை வருகைக்கான புள்ளிகள் பரீட்சை பெறுபேறுகளுடன் எதிர்காலத்தில் சேர்க்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி மாற்றத்தின் கீழ், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குக் கூட மாணவர்கள் வருகைக்காகக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புள்ளிகளைப் பெற வேண்டும் . அதன்படி, எதிர்காலத்தில் மாணவர்கள் வருகை கட்டாயமாக்கப்பட்டுள்ளது, இது அனைத்து தரங்களுக்கும் பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

1,500 இற்கும் மேற்பட்ட குழந்தைகளை ஒரு மண்டபத்தில் கூட்டி சொற்பொழிவு செய்வதன் மூலம் கல்வி என்பது அடையக்கூடிய ஒன்று அல்ல என்றும் . தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் உட்பட ஆரம்ப வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இவ்வாறான கற்பித்தல் முறைகளைப் பிரயோகிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோர்கள் கஷ்டப்பட்டு தங்கள் குழந்தைகளை டியூன் வகுப்புகளுக்கு அனுப்பினால் பாடசாலைகள் இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை எனத் தெரிவித்த அவர், தற்போதைய பொருளாதார மற்றும் சமூக சவால்களுக்கு முகங்கொடுத்து சிரமங்களை எதிர் நோக்கும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக பெரும் தொகையை ஒதுக்க வேண்டிய இக்கட்டான நிலையை உடனடியாகத் தவிர்க்க வேண்டும் என்றும் அமைச் சர் கருத்து தெரிவித்துள்ளார்.

வணிகமயமாக்கப்பட்ட டியூன் வகுப்புகளால் இலவசக் கல்வியின் நோக்கம் மறைந்து வருவதாகவும் இவ்வாறானதொரு நிலைமை வேறெந்த நாட்டிலும் காணப்படவில்லை எனவும், இந்த நாட்டில் ஆரம்பகால கல்வி தொடர்பாகத் தற்போதுள்ள கருத்துக்கள் மற்றும் அளவுகோல்கள் முற்றாக மாற்றப்பட வேண்டிய மட்டத்தில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (05)

# தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு அதிகார சபைக்கு உறுப்பினர்கள் நியமனங்கள்!

நாட்டில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபைக்கு, தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கமைய , மாலைதீவுகளில் உள்ள ஏர்னஸ்ட் என்ட் யங் நிறுவனத்தின் சிரேஷ்ட பட்டயக் கணக்காளரும், முன்னாள் ஆலோசகருமான அர்ஜுன ஹேரத் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அரச தரப்புச் சட்டத்தரணி நிசித் அபேசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி சௌமியா அமரசேகர, டிஜிற்றல் சட்ட நிபுணரும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்ட வரைவு குழுவின் தலைவருமான ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, சர்வதேச தர நிர்ணய அமைப்பின் சான்றளிக்கப்பட்ட கணக்காய்வாளரும் தொழில்நுட்ப முகாமைத்துவ நிபுணருமான பிம்சர செனவிரத்ன, பொறியியல் மற்றும் டிஜிற்றல் மூலோபாய நிபுணர் ஹொான் விஜேதிலக ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலங்கையின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம். 19 மார்ச் 2022 ஆம் திகதி சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு இதன் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்காக சட்டம் இயற்றிய முதல் நாடாக இலங்கை மாறியுள்ளது.

21 ஜூலை 2023 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இதன் ஐந்தாவது பகுதியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனிநபர் தரவு பாதுகாப்புச் சட்டம், கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இதன் மூலம், அரசு நிறுவனங்கள், வங்கிகள், தகவல் தொடர்பாடல் செயல்பாடுகள் மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட நிறுவனங்களால் பொது மக்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் இந்தத் தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டமானது தனியுரிமைச் சட்டத்தின் உலகளாவிய முன்னேற்றத்திற்கும் அரசு மற்றும் தனியார் துறையின் டிஜிற்றல் மூலோபாயங்களுக்கும் அமைவாக மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

தேசிய டிஜிற்றல் மூலோபாயம் மற்றும் இலங்கையின் தனித்துவ டிஜிற்றல் அடையாள திட்டத்துடன் இணைந்து, முதலீட்டை ஈர்ப்பது மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சுயாதீன மேற்பார்வை பொறிமுறையின் ஊடாக தனிப்பட்ட தரவுகளின் சரியான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளில் உள்ள மேற்பார்வை தரப்பினர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட எதிர்பார்க்கப்படுகிறது. (05)

# நான் கட்சி மாறவே மாட்டேன்: வடிவேல் சுரேஷ் அதிரடி அறிவிப்பு



கட்சி மாறாமல் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பசறை பிரதேசத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேலும், மடுல்சிமைக்கு பஸ் கொடுக்க எதிர்க்கட்சித் தலைவர் வரவில்லை என்றும், மக்கள் அவரின் வருகைக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, ஜனாதிபதியுடன் அவர் வெளிப்படையாக பேச விரும்புவதாகவும் , மக்களுக்கான செழிப்பான ஒரு சூழலை அமைத்து கொடுக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். அதற்கு மக்கள் அனைவரும் ஒன்றாக ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்றும் கூறினார். சிறுபான்மையினரின் நாடாளு மன்ற பிரதிநிதி என்ற வகையில் அந்த மக்களின் குறைபாடுகள், பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தானே பொறுப்பு கூற வேண்டும் என்றும் ஜனாதிபதியுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவதே அவரின் கடமையும் பொறுப்பும்..' என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# 314 இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது

பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரையின் பேரில் இலங்கை இராணுவத்தின் 314 அதிகாரி பதவிகள் மற்றும் 1,565 இதர நிலை பதவிகளில் வகிப்போர் உயர்வு பெற்றுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த குழு அடுத்த தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன்படி மேஜர் ஜெனரல் தரத்திற்கு 07 பிரிகேடியர்கள், பிரிகேடியர் தரத்திற்கு 12 கேணல்கள், கேணல் தரத்திற்கு 37 லெப்டினன்ட் கேணல்கள், 41 மேஜர்கள் லெப்டினன்ட் கேணல் தரத்திற்கு, 50 கப்டன்கள் மேஜர் பதவிக்கு (84 பேர் உட்பட) கப்டன் (குவார்ட்டர் மாஸ்டர் உட்பட) மற்றும் 83 இரண்டாம் லெப்டினன்ட் பதவிக்கு லெப்டினன்ட் (வழக்கமான படை மற்றும் தன்னார்வப் படைகள்) பதவி உயர்வு பெற்றுள்ளனர். (05)



# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இமினோகுளோபின் மருந்து!

'நாட்டிலுள்ள நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட இமினோகுளோபின் மருந்தானது எங்கு உற்பத்தி செய்யப்பட்டது எங்கிருந்து கொண்டு வரப்பட்டது என்பது குறித்த எவ்வித தகவல்களும் தற்போது வரையில் வெளியிடப்படவில்லை' என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த நாள்களில் இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த தரமற்ற மற்றும் காலாவதியான மருந்துகள் காரணமாக நாட்டில் பல்வேறு உயிரிழப்புகள் பதிவாகியிருந்தன.

அதேவேளை குறித்த மருந்துகளின் தாக்கம் காரணமாக உடல் ரீதியான பக்க விளைவுகளையும் நோயாளர்கள் எதிர் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# வெளிநாட்டு மருத்துவப் பட்டங்களை அங்கீகரிக்க பச்சைக்கொடி காட்டல்!

சர்வதேச தரவரிசையில் உள்ள பல்கலைக்கழகங்களின் மருத்துவப் பட்டங்களை அங்கீகரிப்பதற்காக தேசியக் கொள்கையை உருவாக்குவதற்கு குழுவை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குழுவின் பரிந்துரைகள் கிடைத்தவுடன், சர்வதேச அளவில் முதல் 1000 இடங்களுக்குள் உள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் மருத்துவப் பட்டங்களை சட்டரீதியாக அங்கீகரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

இலங்கையில் வெளிநாட்டு மருத்துவத் தகுதிகளின் அங்கீகாரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு சுகாதார அமைச்சரால் இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. (05)

# விமான சுழற்சிக் கட்டண விதிமுறையை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி

*2023 ஆம் ஆண்டின் விமானச் சுழற்சி வசதிக் கட்டண விதிமுறைகள் எண். 1 ஐத் திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கிள்ளது.*

*கொழும்பு விமான தகவல் வலயத்தின் ஊடாக பறக்கும் விமானங்களுக்கு விமான போக்குவரத்து கட்டணத்தை விதிக்கும் வகையில் 1981 ஆம் ஆண்டு விமான போக்குவரத்து வசதிகள் ஒழுங்குமுறைகள் இயற்றப்பட்டன.*

*குறித்த விதிமுறைகள் கடந்த காலத்தில் திருத்தப்படவில்லை என அரசாங்கம் கூறுகிறது.*

*எனவே, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் கொள்கைகள் மற்றும் தற்போதைய உலகளாவிய போக்குகளைக் கருத்தில் கொண்டு, விமான போக்குவரத்து வசதிகள் விதிமுறைகள் திருத்தப்பட்டு, விமானப் போக்குவரத்து வசதிகள் விதிமுறைகள் 2023 எண் 1 என வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.*

*துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சரால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சர்கள் சபை ஒப்புதல் அளித்துள்ளது. (05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2023இல் வெளியிடப்பெற்றது.